# கொம்புத் தேன்

(குட்டிக் கதைகள் 100)



ச. வே. பஞ்சாட்சரம்

# கொம்புத் தேன்

## குட்டிக் கதைகள் 100

ஆக்கம் :

**பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்**

வெளியீடு :

சில்வர் பிறின்ற் ஹவுஸ் பதிப்பகம்

மிசிசாக - கனடா

**2014**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கொம்புத்தேன் (100 குட்டிக் கதைகள்) |
| மொழி | : | தமிழ் |
| நூலாசிரியர் | : | பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் |
| தொலை பேசி | : | 289 - 752 - 9065 |
| முதற்பதிப்பு | : | தை - 2014 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர்க்கே |
| வெளியீடு, அச்சுப்பதிப்பு, வடிவமைப்பு, அட்டைப்படம் | : | சில்வர் பிறின்ற் ஹவுஸ் பதிப்பகம் கனடா. |
| பக்கங்கள் | : | 72 (xx + 52) |
| நூலின் அளவு | : | 5" x 7" |

| | | |
|---|---|---|
| Title | : | Kombuth Thane |
| Author | : | Pandit S.V. Panchadcharam |
| Language | : | Tamil |
| fest Edition | : | January - 2014 |
| Type Setting, Printing, Publishing & Cover Designing | : | Silver Print House Publishers Canada. |
| Copy Right | : | reserved |
| Pages | : | 72 (xx + 52) |
| Size of Book | : | 5" x 7" |

# சமர்ப்பணம்



**கிளிநொச்சி,**

**அமரர், கலைஞர் இரா. சத்திய மூர்த்தி**

**அவர்களுக்கு**

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையில் பிறந்து வளர்ந்தவரும், கிளிநொச்சி, யாழ் அரச செயலகங்களின் முன்னாள் ஊழியரும், சிறந்த ஓவியராக, பாடகராக, சோதிட விற்பந்நராக, நாடக எழுதுநர், நடிகராகத் தாம் வாழ்ந்த கிளிநொச்சியிலும், கனடாவிலும் இறுதி மூச்சுவரை தமிழ்ப் பணி, கலைப்பணி புரிந்தவரும், இரக்கமும், அன்பும், அருளும் இயல்பாகப் பொங்கி வழிந்த இதயங் கொண்டவருமான என் இனிய நண்பர் இறையன்பர், அமரர் சத்திய மூர்த்தி இராமலிங்கம் அவர்களுக்கு இந்நூலைப் பாச நெகிழ்வோடு காணிக்கையாக்குகிறேன்.

- ச. வே. பஞ்சாட்சரம்.

# பதிப்புரை

ஈழத்திருநாட்டின் யாழ்குடாவிற்குப் பெருமைதரும் சிற்றூர்களி லொன்றான "இணுவையம் பதி", "தடுக்கி விழுந்த இடமெல்லாம் கோவில்கள்" என்று கூறப்படும் சிறப்புப் பெற்ற கிராமம். இதுவே எனக்கும், இந்நூல் ஆசிரியர் ச. வே. பஞ்சாட்சரம் ஐயா அவர்களுக்கும் பூர்வீகம் ஆகும். அவரிடம் சிறுவயதில், சிலகாலம் கல்விகற்றாலும், அவரது தமிழ்மொழி கற்பித்தல் ஆசிரியத் திறன் மட்டுமே நான் தமிழ்மேல் காதல் கொள்ளவும், இப்பதிப்பகத்தைப் பின்னாளில் உருவாக்கவும் காரணமாக இருந்தது எனலாம்.

எனது கன்னி வெளியீட்டைப்பற்றிச் சிந்தித்தபோது, முதலில் நினைவில் தோன்றியவர் ஆசிரியர் ச. வே. பஞ்சாட்சரம் ஐயா அவர்கள்தான். அது மட்டுமன்றி, எனது இலக்கியச் சஞ்சிகையான "மணி மகுடத்" திற்கான ஆலோசக ஆசிரியராக இவர் இருந்து வருவதாலும், இவருடைய "கொம்புத் தேன்" என்னும் 100 குட்டிக் கதைகள் அடங்கிய இந்நூலை வெளியிடுவதன் மூலம் இதனைக் குருதட்சிணை என்று இதிகாசக் கதைகள் போன்று கூறமுடியா விட்டாலும், நன்றி எனும் கடமையுள்ளவனாகவாயினும் நான் இருக்க ஆசைப் படுகின்றேன்.

இந்தக் குட்டிக்கதைகள் அனைத்தும் பெரும்பாலும் ஒவ் வொரு புதிய கருத்தை உணர்த்தியே அமைந்துள்ளன.

**பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்**

இன்று புலம்பெயர் தேசத் தமிழ் இலக்கியங்கள் தமிழ்ப் பண்பாடுகளோடு புலங்களின் பண்பாடுகள் பழக்கவழக்கங்களையும் சிறிதளவேனும் பிரதிபலித்தே அமைகின்றன. புலத்தில் வாழ்ந்து வரும் ச. வே. அவர்களது இன்றைய இலக்கியப் படைப்புகளிலும் இத்தன்மையைக் காணமுடிகிறது.

இவரது "கொம்புத் தேன்" 100 கதைகளில் 10 வரையில் அப்படியானவை. அவற்றுள் அடிக்கும் அஞ்சாத ஆசிரியர், பெண்ணை ஆள் - மண்ணையாள்!, இரத்தத்தில் ஊறிய நம்பிக்கை போன்ற கதைகள் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந்தும் புலக்கொள்கைகளை இனம் காட்டுகின்றன. தடம்புரண்ட சோசல் மூவ்மென்ற். காதலா பாசமா? போன்ற கதைகளின் நிகழ்வுகள் தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறானவையாக ஊகிக்க வைக்கப்படுகின்றன. ச. வே. அவர்களின் இந்த இலக்கியப் போக்குப் புலத்துத் தமிழ் இலக்கியத்துக்குச் சரியான திசைகாட்டி எனலாம்.

இந்த நூலை எனது பதிப்பகம் வெளியிட அனுமதி தந்த நூலாசிரியர் அவர்களுக்கும். முன்னுரை வழங்கி உதவிய பேராசிரியர். அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், இந்த வெளியீட்டுப் பணியில் எனக்கு ஒத்துழைப்புத் தந்த அனைவருக்கும் எனது நன்றி உரியது.

- **முகுந்தன் சிவதாசன்**
(உஷாதாசன்)
15. 10. 2013

# முகவுரை

காலங்காலமாகப் பெருகிவரும் மக்கள் தொகையும், அதனூடு பெருகிவரும் வாழ்வியல் பிரச்சினைகளும், அன்றாடத் தேவைகளும் பற்பல கோடியாகப் பல்கியுள்ள இன்றைய சமுதாயச்சூழ் நிலையில், தனிமனித, சமூக வாழ்வியல் நிகழ்வுகளும், பல்லாயிரக் கணக்கில் இடம் பெற்று வருகின்றன. இவற்றுள் வழமையானவையன்றிப் புதியனவும் ஏராளமாய் உள்ளன.

சங்ககால அகப்புற இலக்கியங்கள், சங்கமருவியகால அறநூல் இலக்கியங்கள், பல்லவர்காலப் பக்தி இலக்கியங்கள், சோழர் காலக் காவிய இலக்கியங்கள், நாயக்கர் காலப் பிரபந்த இலக்கியங்கள், ஐரோப்பியர் கால, பிற்பட்டகால நாவல், சிறுகதை, நாடக, திறனாய்வு இலக்கியங்கள் என்று இவை யாவும் மொத்தத்தில் மனித வாழ்வியற் கோலங்களை, கருத்தியல் விகற்பங்களை, படிப்பினைகளைத் தமிழில் பதிவு செய்தே வைத்திருக்கின்றன.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலமானது முந்திய காலங்களைவிடப் புதிய புதிய வகைகளான புற, அக நிகழ்வு களை, சிக்கல்களைத் தாங்கி நகர்கிறது. இந்த நிகழ்வுகளுள் அநேகமானவற்றுள், சிப்பிக்குள் முத்துப்போலப் புதிய படிப்பினை கள் பலபல பொதிந்து கிடக்கின்றன. சாதாரண மக்களின் மேலோட்டமான பார்வையில் அந்தப் படிப்பினைகள் தட்டுப்படுவதில்லை. ஒரு நிகழ்வின்போது வெளிப்படும் ஒருவரின் செயற்பாட்டைத் துலங்கல் என்றும், அந்தச் செயற்பாட்டில்

ஈடுபடும்படி அவரைத் துண்டிய உணர்ச்சி, விருப்பு, வெறுப்பு எதுவோ அதைத் தூண்டி (தூண்டல்) என்றும், அந்தத் துலங் கலைக் கொண்டு அதற்குத் தூண்டிய தூண்டியை (உணர்ச்சியை) ஊகித்துக் கண்டுபிடிக்க முடியும் என்றும், அதன்மூலம் அவரது மனப் பக்குவநிலையை அளந்தறிய முடியும் என்றும் உளநூல் கூறுகிறது.

அவ்வாறான உளவியல் அணுகுமுறையில் தமது மூன்றாவது கண்ணான பகுத்தறி முனைப்புமூலம் முயல்பவர்க்கு மட்டுமே அந்த நிகழ்வில் இடம் பெறும் துலங்கலின் தூண்டியை, காரணியை ஊகித்துக் கண்டறிய முடியும். பொதுவாக எழுத்தாளர் அனைவருமே மூன்றாவது கண்ணாகிய பகுத்தறி முனைப்புக் கொண்டே இருப்பதால் சமகால நிகழ்வுகள் பலவற்றின் காரணகாரியத் தொடர்புகளை, தூண்டல், துலங்கல்களைக் கண்டறிந்து, அவற்றில் பொதிந்துள்ள படிப்பினைகளை மையக் கருக்களாக்கிச் சிறுகதைகளாக, நாவல்களாக, நாடகங்கள், காவியங்களாகப் பதிவு செய்து வருகின்றார்கள்.

அந்த வழியில் நானும் சின்னஞ்சிறு கதைகள், சிறுகதை கள், உருவகக் கதைகள், நாவல், நாடகங்கள், குறுங்காவியங்கள், கதைக்கவிதைகள் என இதுவரை ஏறக்குறைய 200 கதைகள் வடிவில் சமகால நிகழ்வுகளைப் பதிவுசெய்துள்ளேன். இப்பொழுது மேலும் 100 குட்டிக் கதைகளில் புதிய நிகழ்வுகள், படிப்பினை களைப் பதிவு செய்து "கொம்புத் தேன்" என்னும் பெயரில் நூலாக்கியுள்ளேன். படிப்பினைப் பதிவுகள் எந்த அளவிலோ மனிதமனப் பக்குவப்பாட்டுக்கு உதவியே வருகின்றன. ஆயினும் ஈழத்தமிழினம் அண்மைக் காலங்களில் சந்தித்த பேரழிவுகளைத்

தவிர்க்கும் புண்ணியப் பலம் பெறும் அளவிற்கு இதுவரையிலான அப்பதிவுகள் தமிழர் ஆன்மாக்களைப் புனிதப்படுத்தியிருக்க வில்லை.

பண்டிதன் முதல் பாமரன் வரை நம்மனைவரையும் பிடித்தாட்டி நிற்கும் முகாமைத்துவ வெறியும், எனக்கு எல்லாம் தெரியும் என்ற மக்குத்தனமான, மட்டித்தனமான அகந்தையுமே எமது இந்தத் தன்னழிப்புகளுக்குக் காரணமாகின்றன.

தர்மநம்பிக்கை, கடவுள்பயம் அற்றவர்களாய், தந்திரங்களி லேயே அதீத நம்பிக்கைவைத்துப் பாவ வழிகளில் கூசாமல் ஈன இரக்கமின்றிச் செயல்படுகிறோம். சுயநல இச்சைகளுக்கு அமைய ஒவ்வொரு முடிவை எடுத்து, அவற்றை நியாயப்படுத்த முயல்வதை இனியாவது கைவிட்டு, அந்த விடயங்களில் சரிபிழைகளை முதலில் நன்கு ஆராய்ந்து தெளிந்து, தென்பட்ட சரியான நியாயமான முடிவையே நாம் ஏற்று நடப்பதே எங்கள் சமூகம் ஆன்ம சுத்தி பெறவும், தொடரும் துன்பங்களிலிருந்து மீட்சி பெறவும் வழிசெய்யும்.

கேத்திர கணித நூலார் நிறுவப்பட்ட, தேறப்பட்ட உண்மைக ளையே தேற்றம் (Theorem) என்பர். நிறுவப்பட்ட உள்பொருளான கடவுளையே மணிவாசகரும் "தேற்றனே" என்றும், "தேற்றத் தெளிவே" என்றும் விளித்தார். சித்தாந்தம் என்பதன் பொருள் சித்து ஆகிய அந்தம் என்பதாகும். சித்து என்பதும் நிறுவப்பட்ட

தேற்றமே, முடிந்த முடிபேயாகும். நம் வாழ்வின் சகல கூறுகளிலும் எழக்கூடிய சிக்கல்களுக்குத் தீர்வுகளாகத் தெளியப்பட்ட தேற்றங்கள் நம்மெல்லோரிடமும் ஆயத்த நிலையிலிருக்க வேண்டும். இன்று அவை நம்மில் பலர்வசம் போதிய அளவு இல்லாதிருப்பதால் பழிச்செயல்களும், சமூக உள்மோதல்களும் மலிந்து நம்முள் ஒற்றுமைப் பலம் சிதைகிறது.

எனவே இன்று தமிழர்களுக்குக் கட்டாயமாகத் தேவைப்படும் சகல துறைச்சிக்கல்களுக்குமான தேற்றங்களை முடிந்த முடிவுகளைத் தெளிவாகவும், கவர்ச்சிகரமாகவும் வழங்க வேண்டிய பொறுப்பு எழுத்தாளர்களுக்கே முதன்மையாக உண்டு. ஈழத்தமிழ் மக்களிடையே தமிழ் வாசிக்கும் வழக்கம் பெருமளவில் அற்றுப் போய்க்கொண்டிருக்கும் இன்றைய நிலையில் அவர்களைத் தமிழ் வாசிக்கத் தூண்டும் விதத்தில் சிறுசிறு கதை வடிவங்களில் கவர்ச்சிகரமான இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். இதனாலும், சஞ்சிகைளில் வெளிவரும் கேலிச்சித்திரங்கள், நகைச்சுவைத் துணுக்குகளையே அதிக மக்கள் விரும்பி வாசிப்பதைக் காணமுடிகின்ற யதார்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டும், இந்தக் குட்டிக் கதைகளோடு நகைச்சுவைத் துணுக்குக் கதைகளும் இந்தக் ‘கொம்புத் தேன்’ தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இன்று உலகில் பல்லாயிரக் கணக்கான தமிழ் எழுத்தாளர் கள் எழுதுகின்றார்கள். என்றாலும், அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற அளவுக்கு ஆக்க இலக்கியங்கள் தமிழில் தோன்றுவதில்லை. அதற்கு ஒரு காரணம் அநேகமானவர்கள் அரசியல், பொருளியல், விஞ்ஞான, கைத்தொழில், இலக்கிய, நாடக, திரைப்பட விமர்சனங்

கள் போன்ற துறைகளிலேயே ஈடுபடுவதாகும். அடுத்த காரணம் இன்று தமிழ்ப் படைப்பாளிகளி டையே நிலவும் ஓர் வீண் அச்சமாகும்.

அதாவது "ஓர் எழுத்தாளன் எழுதும் கதைகள், கவிதைகள் முழுக்க முழுக்க அவனது சொந்த அனுபவங்களே என்று வாச கர்கள் நம்புவார்கள். அதனால் நாங்கள் புதிய - வித்தியாசமான பாடு பொருட்களை, கதைச்சூழல்களை, முரண்நாயக பாத்திர குணச்சித்திரங்களை எழுதினால் 'உது உவருக்கு எப்படித் தெரியும்? அனுபவித்த படியால்தானே?' என்று எங்களை இழிந்தவர்களாக எண்ணிவிடுவார்களே!" என்பதே அந்த அச்சமாகும்.

ஒரு பிரெஞ்சு எழுத்தாளன் தனது சரித்திர நாவலில் ஒரு போர்க்களக் காட்சியைச் சொல்லோவியமாக வரைந்து கொண்டி ருந்த வேளை யாரோ அறையின் வாயிலில் நுழைவதைக் கண்டு, "நில்லங்கே! இப்பொழுது நான் போர்க்களத்தில் நிற்கிறேன். கிட்ட நெருங்கினால் வாளால் உன்னை வெட்டிவிடுவேன்" என்று தன் பேனாவைக் காட்டினானாம். தானே ஒரு போர்வீரன் பாத்திரமாக அதீத கற்பனைமூலம் மாறிநின்று, அந்த நாவலா சிரியன் பெற்ற கொலைவெறி வீராவேசமே அது. அன்றி அவன் கொலை வெறி வாடிக்கை அனுபவங் கொண்டவன் என்று வாசகர்கள் கணிப்பதில்லை.

மகாகவி பாரதியார், "மோடி கிறுக்குதடி தலையை – புது மொந்தைப் பழைய கள்ளைப் போலே!" என்று காமுக வேடன் பாத்திரமாக மாறி நின்று காமத்தைப் பாடினார் என்பதால்

யாரும் அவரைக் காம வெறியனாகக் குறைத்து மதிப்பிடுவ தில்லை. மேலும் பழைய கள்ளைக் குடித்தால் மிக அதிகம் வெறிக்கும் என்ற உண்மையினைப் பிறர் சொல்லக்கேட்டோ, பிறரில் கண்டோ அறிந்துதான் பாடினார் பாரதியார் என்றுதான் வாசகர்கள் கொள்கின்றார்களே ஒழிய அவரைக் குடிகாரன் என்று யாரும் எண்ணுவதில்லை.

எனவே இன்றைய காலத்தின் கோலங்களான பிரச்சினை களுக்குத் தீர்வுகளை அள்ளிவழங்கும் ஆற்றலுள்ள சமகாலத் தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் வீண்பயங்களை உதறித்தள்ளி, புதிய கற்பனைகள், புதிய களங்கள், புதிய மையக்கருத்துக்கள், புதிய பிரச்சினைகள் என்பவற்றைக் கவர்ச்சிகரமாகக் கையாண்டு சிறுசிறு கதைகள் நிறையப் படைப்பதன் மூலம் சகலதுறை விடிவுகளையும் ஈட்டத்தேவையான மனோபலம், ஒழுக்கபலம், ஆன்மபலம், ஒற்றுமைப் பலம் என்பவற்றை ஈழத் தமிழினம் ஈட்டிக்கொண்டு நிமிர்ந்து எழ வழி செய்ய வேண்டும்.

எனது இந்தக் குட்டிக்கதைகளிற் பல நாவல்களாக, சிறு கதைகளாக, மேடை நாடகங்களாக, காவியங்களாக விரித் தெழுதப்படத்தக்க வலிவான ஆழமான மையக்கருத்துக்களைக் கொண்டவை. என் இலவச அனுமதியை எழுத்தில் பெற்று, எனது மூலக் கதை என்ற குறிப்புடன் யாரும் விரித்து எழுதித் தமிழிலக்கியத்தை வளப்படுத்தலாம்.

வயோதிபங் காரணமாக "இதுவரை எழுதியதுபோதும்!" என்று இலக்கியத் துறவு பூண்டு, ஆன்ம விடுதலைக்கான இறைவழிபாட்டில் மூழ்கிவரும் என்னை அவ்வப்போது சந்நதம்

ஊட்டி, எழுதவைத்து, இக்கதைகளை உருவாக்கிய இறை யருளுக்கும், எழுதிமுடித்த கையோடே முன்வந்து இக்கதை நூலை என்னிடம் கேட்டுப்பெற்றுத் தமது "சில்வர் பிறின்ற் ஹவுஸ்" பதிப்பகத்தின் வெளியீடாகப் பிரசுரிக்கும் என் மாணவன் (இந் நூலின் அட்டைப்படத்தை உருவாக்கியவர்), பிரபல பதிப்பக, ஊடக, நாடகக் கலைஞரான குரும்பசிட்டி அமரர் சிவதாசன் அருலம்பலம் அவர்களின் மைந்தன் முகுந்தன் சிவதாசன் அவர் களுக்கும், இந்நூலின் 100 கதைகளையும் ஒரே நாளில் வாசித்து, அவற்றின் ஒட்டுமொத்த ஆன்மாவையும், அடிநாதங்களையும் வெற்றிகரமாகக் கண்டறிந்து அதே நாளில் முன்னுரையாக வெளிப் படுத்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், இந்நூற் பிரதிகள் வாசகர்களின் கைகளைச் சென்றடைய உதவும் அனைவருக்கும் எனது நன்றி உரியது.

ச. வே. பஞ்சாட்சரம்.
114, Commodore Drive,
Brampton, ON, L6X 0T3 Canada.
தொலை பேசி : ~~289 752 9065~~
905.216 0804
15/10/2013.

# முன்னுரை

"கொம்புத் தேன்" (குட்டிக்கதைகள் - 100) என்னும் தலைப்பில் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களுடைய இந்நூலைப் படித்தபோது பெருந்தொகையான துணுக்குகளைப் படிப்பது போலிருந்தது.

ஒவ்வொன்றும் ஒரு நல்ல செய்தியினைக் கூறுகிறது.

பல கதைகள் ஆசிரியருடைய உலக அவதானிப்புக்களாக அமைகின்றன.

இன்றைக்கு நம்முடைய இளைஞர்கள் ஊக்கமுடையவர்களாக, வலுவுடையவர்களாக ஆகவேண்டுமென ஆசிரியர் எண்ணங்கொண்டு ஓர் அருமையான கதையை எழுதியுள்ளார்.

முதியவரான ஒரு சமூகத் தொண்டரை ஊக்கமில்லாத, வலுவில்லாத ஓர் இளைஞன் வாழ்த்தும் பொழுது "70 வயது இளைஞரான இந்தச் சமூகத் தொண்டரை 30 வயது வயோதிபனான நான் வாழ்க! வாழ்க! என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்" என்று கூறுவது பொருத்தமாக அமைகிறது.

'ஆத்திகப் பிரகடனம்' என்பதும் நல்ல சுவையுடைய படைப்பாக அமைகிறது.

மாணவன் நாத்திகரான தன் ஆசிரியரைக் கடலிலிருந்து காப்பாற்றுகிறான்.

மாணவன் தன்னைக் காப்பாற்றினான் என்று கூற விரும்பாத ஆசிரியர் கடவுள்தான் தன்னைக் காப்பாற்றினார் என்றார்.

ஆனால் மாணவனோ தான் ஆசிரியரைக் காப்பற்றியது மட்டுமன்றி அவரை ஆத்திகராகவும் ஆக்கிவிட்டதாக மகிழ்ந்தான்.

பல குட்டிச் செய்திகளை அறிந்து கொள்வதற்கு இந்நூல் உதவும்.

இதற்கு இந்தக் குட்டி முன்னுரையினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

- முன்னாள் பேராசிரியர்,
**அ. சண்முகதாஸ்.**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
09 - 20 - 2013

# நூலாசிரியரின் பிற நூல்கள்

1) எழிலி - காவியம் (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது)
2) தண்டலை – (கவியரங்கக் கவிதைகள் தொகுதி – 1)
3) நாடும் வீடும் (கவியரங்கக் கவிதைகள் தொகுதி – 2)
4) இன்பவானில் (அகத்துறைக் கவிதைகள்)
5) வேள்வி நெருப்பு - 2ஆம் பதிப்பு (சின்னஞ்சிறுகதைகள்)
6) தமிழ் இலக்கணப் பூங்கா 5ஆம் பதிப்பு
7) கூலிக்கு வந்தவன் (சமூகநாவல்)
8) பூகம்பப் பூக்கள் (நூறு குறும்புப்பாக்கள்)
9) தமிழ் இலக்கிய வினாவிடைப் பூங்கா
10) இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை வரலாறு
11) முக்கோட்டத்துதி
12) இணுவை செகராசப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ்
13) இணுவை முருகன் பிள்ளைத்தமிழ்
14) அன்னை நாச்சி அருள்மஞ்சரி
15) அன்னை அருளமுதம்
16) சுன்னை ஐயனார் அம்புலித்தூது
17) கைதடி நுணாவில் சிவபூதராயர் பதிகம்
18) கிளி – கந்தபுரம் முருகன் திருப்பள்ளியெழுச்சி
19) கிளி – கந்தபுரம் இத்தியடி அம்மன் திருப்பள்ளியெழுச்சி
20) மல்லாவி யோகபுரநாதர் திருப்பள்ளியெழுச்சி
21) கந்தபுரம் முருகன் மும்மணிக்கோவை
22) பாலம்பிட்டி முத்துமாரி அம்மன் மும்மணிக்கோவை
23) இணுவில் விளாத்தியடி ஞானவைரவர் திருவிரட்டை மணிமாலை
24) வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் திருவிரட்டை மணிமாலை
25) கண்ணன் கவசம் - 2ஆம் பதிப்பு (ஒலிநாடாவாகவும்)
26) கந்தபுரக் கண்ணனுக்குத் தூது
27) கந்தபுரக் கண்ணபிரான் திருவூஞ்சல்
28) கந்தபுரம் கரும்புத்தோட்ட விநாயகர் திருவூஞ்சல்
29) கந்தபுரம் ஸ்ரீ நாகதம்பிரான் திருவூஞ்சல்
30) கந்தபுரம் முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்

31) கந்தபுரம் நடனமுத்து மாரியம்மன் திருவூஞ்சல்
32) கந்தபுரம் 2ஆம் பாடசாலைத் துர்க்கை அம்மன் திருவூஞ்சல்
33) பலாலி மனோன்மணி அம்மன் திருவூஞ்சல்
34) உடுவில் புளியடி ஞானவைரவர் திருவூஞ்சல்
35) முழங்காவில் முருகன் திருவூஞ்சல்
36) வன்னேரி ஐயனார் திருவூஞ்சல்
37) பரந்தன் பொறிக்கடவைக் கண்ணகியம்மன் தலபுராணம்
38) கந்தபுரம் கொண்டலடி ஞானவைரவர் பதிகம்
39) கிளி – ஆனந்தபுரம் துர்க்கை அம்மன் துதி
40) அக்கராயன் ஆரோக்கியபுரம் சித்திவிநாயகர் திருவடிபுகற்பா
41) உடுப்பிட்டி மனோன்மணி அந்தாதி
42) மல்லாவி யோகபுரநாதர் சேவடிச் சிந்து
43) வன்னேரி ஐயனார் அருள்மங்கலம்
44) கந்தபுரம் காட்டம்மன் சிந்து
45) ச. வே. பஞ்சாட்சரம் கவிதைகள் தொகுதி (பரிசு பெற்றது)
46) கந்தரோடை வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல்
47) செல்வச்சந்நிதி வெண்பா
48) சின்னப்பாப்பா பாட்டு
49) பஞ்சாட்சரம் பாநாடகங்கள்
50) வேலணை ஸ்ரீ காளியம்மன் திருப்பள்ளி எழுச்சி
51) சுன்னாகம் சொர்ணபத்திரகாளி திருவூஞ்சல்
52) கனடா துர்க்கேஸ்வரம் துர்க்கை வெண்பா
53) கனடா துர்க்கேஸ்வரம் தலபுராணம்
54) அன்னைமண் (51 சிறுகதைகள்)
55) உரும்பிராய் மகாமாரி அம்மன் திருவூஞ்சல்
56) இந்தத் தீபாவளி தேவைதானா? (10 சிறுகதைகள்)
57) வண்டி முன்னாக! மாடு பின்னாக! (40 உருவகக் கதைகள்)
58) – 90) சிறு காவியங்கள்

## கொம்புத் தேன் – குட்டிக்கதைகள் 100

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கொம்புத்தேன் | 01 |
| 2. | அழுவது யாருக்காக? | |
| 3. | முனிப்பிள்ளையோ? | 02 |
| 4. | புரியப்படாத புனிதங்கள் | |
| 5. | தாய் போட்ட வாய் மண் | 03 |
| 6. | பை நிறைக்கும் படைப்புகள் | |
| 7. | இனித்தது கசக்கிறது | 04 |
| 8. | நல்ல தீர்ப்புகள் | |
| 9. | அடிக்கும் அஞ்சாத ஆசிரியர் | 05 |
| 10. | கொன்றவனும் கொலையுண்ணல் | |
| 11. | மனிதனைக் கெடுக்கும் மதங்கள் | 06 |
| 12. | நவீன மனிதத் தோற்றம் | |
| 13. | வேலை வாங்கும் வெறி | 07 |
| 14. | அன்பின் இனிமை, வலிமை | |
| 15. | தற்புகழ்ச்சித் தாகத்தினால்.....! | 08 |
| 16. | வாழ்விக்கும் வாழ்த்துக்கள் | |
| 17. | ஒரு தீங்கு எதிர் ஒரு தீங்கு = நன்மை | 09 |
| 18. | பெண்ணை ஆள் - மண்ணை ஆள்! | |
| 19. | இலாபம் தராத பாபம் | 10 |
| 20. | அருளாளர் கிராமம் | |
| 21. | செத்தும் காத்த தலைவர் | 11 |
| 22. | முப்பது வயது மூதாளன் | |
| 23. | கோவில் குடிசையானது | 12 |
| 24. | மனைவிக் கடன் | |

| | | |
|---|---|---|
| 25. | ஆத்திகப் பிரகடனம் | 13 |
| 26. | பேராசைப் பேய் | |
| 27. | ஏமாற்றாதே ஏமாறாதே | 14 |
| 28. | தடம் புரண்ட "சோஷல் மூவ்மெண்ட்" | |
| 29. | 7வயதுப் பாட்டி | 15 |
| 30. | வலது குறைந்த சுவாமி | |
| 31. | ஏழ்மையின் இன்பம் | 16 |
| 32. | எடுப்பது பிச்சை! பிடிப்பது பதவி | |
| 33. | காதல் மணங்கள் | 17 |
| 34. | கல்வி வளர்த்த காஞ்சிரைகள் | |
| 35. | புற்றில் புகுந்த புடையன் | 18 |
| 36. | கேட்டதுங் கிடைத்ததும் | |
| 37. | புண்ணியம் காக்கும் | 19 |
| 38. | மனிதம் செத்த மனங்கள் | |
| 39. | நாம் ஒன்றை நினைக்க.......? | 20 |
| 40. | கிடைக்கும் இடத்தில் கேள்! | |
| 41. | ஞானத் தேனீ | 21 |
| 42. | மது கைவிடேல்! | |
| 43. | ஒரு சமயம் ஒரு கழுதை மட்டும்! | 22 |
| 44. | அநாதைகளான அப்பாவிகள் | |
| 45. | செய்வன செய்ய............! | 23 |
| 46. | இது சிறிய அதர்மம் | |
| 47. | தண்ணீரும் இனிக்கும் சாப்பாடு | 24 |
| 48. | "ப்பூ....! உது பெரிய புதினமா?" | |
| 49. | எல்லாம் நன்மைக்கே! | 25 |
| 50. | தந்தை தாய்க் கொலை | |

51. பெற்றோர்க்கான கடமை மறந்து........! 26
52. அன்றில்களோ அன்றில்கள்!
53. நழுவல் நாடகம் 27
54. கடவுளின் தயக்கம்
55. கனடா 1 கோடி = திருமலை 3 மாடி 28
56. பறையடிப்பும், படியமைப்பும்
57. யார் துணையில் யார்? 29
58. மனைவியின் கணவரின் மகன்
59. கைப்பேசியின் கருணை 30
60. பாசத்தெய்வீகம்
61. இரத்தத்தில் ஊறிய நம்பிக்கை 31
62. இருதாரக் குற்றம்
63. அவளும் அழுதாள்! 32
64. என்றோ விதைத்து இன்றே அறுத்து.....!
65. உண்மைத்தியாகிகள் 33
66. தவித்த முயல் அடித்தோரும்...!
67. தானே தன் சதிக்குச் சாட்சி 34
68. காலங் கேட்கும் ஓய்வு
69. குறும் பார்வைக் குருடன் 35
70. சென்னை மாநகர் வீதிகளில்!
71. பொறாமைச் சிறுமை 36
72. ஆச்சி வயதிலும் அம்மாடி!
73. செவிட்டுப் பாக்கியம் 37
74. புண்ணியமும், புகழும்
75. தீங்கிடையும் தீண்டாமை 38
76. பிறர் துயரில் பங்கேற்று....!

| | | |
|---|---|---|
| 77. | காதலா? பாசமா? | 39 |
| 78. | பாவக்கிரகப் பசப்பல் | |
| 79. | பாவங்கள் உள்ள மட்டும்...! | 40 |
| 80. | இப்படியும் அறநெறிகள்! | |
| 81. | கடைக்குட்டிப் பாசம் | 41 |
| 82. | அம்மாக்கள் புகழ் பாடும் அப்பாக்கள் | |
| 83. | ஒப்புதல் வாக்கு மூலம் | 42 |
| 84. | அமிர்தக்கண் அன்னை | |
| 85. | மாணவர் வைக்கும் பரீட்சை | 43 |
| 86. | அகம்பாவம் பெரும்பாவம் | |
| 87. | இராவணன் மீசை | 44 |
| 88. | பாவிகள் பிறக்கும் நாடு | |
| 89. | கடவுளுக்குக் கம்மி விலை நெய் | 45 |
| 90. | "அல்வா பசிக்கி'து" | |
| 91. | மனித வல்லமைகள் | 46 |
| 92. | போதையிலும் புத்திக்கூர்மை | |
| 93. | தேவலோகம் நாறிடுமே! | 47 |
| 94. | பணிப்பாளர் பாதையிலே......! | |
| 95. | பைத்தியம் படுகொலை | 48 |
| 96. | சென்றது தனித்தனி! வந்தது.....? | |
| 97. | அந்தோ எங்கள் மணிகளே! | 49 |
| 98. | அப்பா பெயரில் அம்மாவுக்காக! | |
| 99. | தாலாட்டுப் பயங்கரம் | 50 |
| 100. | புகழாசை புரிந்த கொலை | |

## 0 1 கொம்புத் தேன்

அந்தக் கோடி சீமானின் மனைவிக்கு மகப்பேறு இன்மையால் அவர் ஒரு வாடகைத்தாய் மூலம் ஒரு மகனுக் குத் தந்தையானார். அவரும் மனைவியும் அக்குழந்தையை வளர்த்து வரும்போது மனைவிக்கும் ஒரு மகன் பிறந்தான். இதனால் சீமான் முதற் குழந்தையை வாடகைத்தாயிடமே ஒப்படைத்து இலட்சக்கணக்கில் பணம் அனுப்பி வந்தார். பணத்திற்காக வாடகைத்தாயாக ஏழு பிள்ளைகளைப் பெற்றுப் பிரிந்த அவள், பிள்ளைக் கலிதீரக் கொஞ்சத் தன் ஒரு பிள்ளை, முடவனுக்குக் கிடைத்த கொம்புத் தேன் போல, கிடைக்கப்பெற்று மகிழ்ந்தாள்.

## 0 2 அழுவது யாருக்காக?

நடுச்சாமத்தில் விழித்துக்கொண்ட கிழவியின் "அவனை விடுதலை செய்வாங்களோ, என்னவோ?" என்ற புலம்பலால் தூக்கங் கலைந்து எழுந்த கிழவர், "எங்கள் பிள்ளை நிரபராதி அப்பா. சீக்கிரம் விடுதலையாவான்!" என்றார். "அதுபற்றி இல்லை. டி.வியில் திருமதி செல்வம் நாடகத்தில் சிறையிலிருக்கிற செல்வத்தை நினைக்கத்தான் அழுகை வருகிறது" என்றாள் கிழவி.

## 03 முனிப்பிள்ளையோ?

அடி உறைக்கவும், அன்பு இனிக்கவும் கலகலப்பாகக் கற்பிக்கும் இலக்கிய ஆசிரியர் வகுப்பில் சொன்னார்: "குடும்பங்களில் தலைப்பிள்ளைகளுக்கு இருக்கும் மதிப்பு அடுத்த பிள்ளைகளுக்கு இருப்பதில்லை. மூத்ததைக் கடவுள் என்பர். அடுத்ததைப் பிள்ளை என்பர். இப்படியே மூன்றாவதைச் சனி, நாலாவதைப் பேய், ஐந்தாவதை முனி என்று சலிப்பார்கள்." வகுப்பிலிருந்த ஒரு மாணவன் கேட்டான்: "சார், நீங்கள் உங்கள் குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையா?" ஆசிரியர், மாணவர்களின் சிரிப்பொலியால் கல்லூரியே அதிர்ந்தது.

## 04 புரியப்படாத புனிதங்கள்

பிள்ளைகளை வளர்க்கவும், படிப்பிக்கவும் என்று அவர் ஒரு பேருந்து நிலையத்தில் இராப்பகலாக மூடை சுமந்து உழைத்ததால் தம் பிள்ளைகளைக் கொஞ்சி மகிழும் ஏக்கம் நிறைவேறவில்லை. பிற்கால முதுமையில், அந்த ஏக்கம் தூண்டத் தமது பிள்ளைகளின் குழந்தைகளை அவர் கொஞ்சியபோது "அப்பா நன்றாக நடிக்கிறார்" என்று பிள்ளைகள் அவரை ஏளனஞ் செய்தனர்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 05 தாய் போட்ட வாய் மண்

தமது பிள்ளைகள் வீண்பகட்டுகளில் இறங்கும் போது, தந்தை புத்தி சொல்லும் வேளைகளில் எல்லாம் அவர் சாபம் போடுவதாகப் பாமரத்தாய் திட்டுவாள். இதைப் பார்த்துப் பிள்ளைகளும் தந்தை எது சொன்னாலும் சாபமிடு வதாக எதிர்த்தனர். தந்தை ஒதுங்கினார். பிள்ளைகளோ பகட்டு வெறியிலே அலைந்து, கல்வியில் பின்னடைந்து, இன்று கூலிகளாக அடிமை வாழ்வில் உழல்கிறார்கள்.

## 06 பை நிறைக்கும் படைப்புகள்

“நாற்பது ஆண்டுகளாக நான் என்னதான் எழுதியும், வெளியிட்டும் இந்தச் சமூகம் இம்மியாவது திருந்தியதா? வீணாக நான்தானே ஏழையானேன்? மடத்தனமாகப் புத்திமதி எழுத்தால் செலவிட்ட காசை இனி இந்தச் சமூகத்தின் போக்கைப் புகழ்ந்து பாடி என்றாலும் நான் மீட்க வேண்டும்!” என்று அந்த எழுத்தாளன் இன்று ‘திருந்தி’ எழுதுகிறான். இப்பொழுது அவனுக்கு விருதுகளும், பணமும் குவிந்து வருகின்றன.

## 07 இனித்தது கசக்கிறது

அந்தத் தாய் தன் மூத்த மகன் சிறுவனாக இருக்கும் போது உறவினர்களின் சொத்துக்களைச் சுரண்டிவந்து தன் சகோதரர்களுக்கு வழங்கியபோது மகிழ்ந்தாள். அந்தப் பழிக்குத் தண்டனையாக இப்பொழுது அந்த மூத்த மகன் திருமணமாகி, தன் சகோதரர்களின் சொத்துகளைச் சுரண்டித் தன் மனைவி, மக்களுக்கு ஊட்டங் கட்டுவதைப் பார்த்து மனம் வேகிறாள்.

## 08 நல்ல தீர்ப்புகள்

களவெடுத்த குற்றம் நிரூபிக்கப்பட்ட அவரது மகனுக்கு 5 இலட்சம் தண்டப்பணம் அல்லது 3 ஆண்டுச் சிறை என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. அதே நேரம் அவரது மகளின் திருமணம் ஒப்பேற மணமகன் வீட்டால் 5 இலட்சம் சீதனங் கேட்கப்பட்டது. வங்கியிலிருந்த தமது பணம் 5 இலட்சத்தையும் எடுத்து மகளின் சீதன மாகவே வழங்கினார் தந்தை.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 09 அடிக்கும் அஞ்சாத ஆசிரியர்

அந்த ஆபிரிக்கப் பள்ளியில் ஒரு மாணவனால் தாக்கப்பட்ட ஆசிரியர் சொன்னார்; "உங்கள் தாக்குதல்களை நான் உடல்பலம் உள்ள இப்போது தாங்கிக் கொண்டு உங்களுக்குக் கற்பிக்கத் தவறினால், நீங்கள் பிற்காலத்தில் குட்டிச் சுவர்களாகி அலையும் போது என்னைத் தாக்கினால் முதுமை காரணமாக அதைத் தாங்க முடியாமல் நான் சாக நேரிடும். ஆகவே இப்பொழுது அடி வாங்கி, வாங்கியும் உங்களுக்குக் கற்பித்தே தீருவேன்"

## 10 கொன்றவனும் கொலையுண்ணல்

தன் தம்பியின் சொத்துக்களை அபகரிப்பதற்கு ஓர் அந்நிய அடாவடிக் கும்பலைப் பயன்படுத்திய ஓர் அண்ணன், இப்பொழுது தானும் அந்தக் கும்பலால் அடிக்கடி மிரட்டப் பட்டும், தாக்கப்பட்டும் பெரும் தொகைக் கப்பம் கறக்கப் பட்டுக் கலங்கி வருகின்றான்.

## 1 1 மனிதனைக் கெடுக்கும் மதங்கள்

அந்த நாட்டில் போட்டியாக இரு வேறு மதங்கள் கைக் கொள்ளப் படுகின்றன. ஒரு மதத்தவர் விடும் சிறு பிழைகளையும் பெரிதுபடுத்தி, மறுமதத்தவர்கள் தாம் பிடிபடாமல் மதிற் சுவர்களில் எழுதிவிட, அவற்றைப் பார்த்துப் பத்திரிகைகள் பறையடிக்க, மாறி மாறி இரு மதங்களும் இவ்வாறு தூற்றப்படுகின்றன. அதனால் கடவுளை நம்பு வோரும் குறைந்து, நாத்திகர் மிகுந்து நாடே குற்றச் செயல்கள் மயமாகியுள்ளது.

## 1 2 நவீன மனிதத் தோற்றம்

ஒரு மனித உடல் வரைந்து, உடல் உறுப்புகளுக்குப் பெயர் குறிக்கும்படி ஒரு பள்ளி 3ஆம் வகுப்பு மாணவர்கள் பணிக்கப் பட்டிருந்தனர். மாணவர்களில் அநேகர் காதில் கைப்பேசி பிடித்தபடியான மனித உருவை வரைந்து, கண், மூக்கு, காது முதலியவற்றுடன் கைப்பேசியையும் ஓர் உடலு றுப்பாகப் பெயரிட்டிருந்தனர்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 13 வேலை வாங்கும் வெறி

வேலை வாங்கும் வெறியால், வேலைக்காரி தலையில் வீட்டு வேலைகள் அனைத்தையும் சுமத்தி, புதிதாகப் பூஞ்சோலையும் அமைப்பித்து, நீர்தாங்கி மூலம் தினமும் நீர்பாய்ச்சும் பணியையும் சுமத்திய அந்த வீட்டு எசமாட்டி இரவுபகல் மெத்தையில் கிடந்து புரண்டு வந்தாள். 2 மாதங்களில் அவளுக்குப் புதிதாக ஏற்பட்ட நீரிழிவு, கொழுப்பு நோய் மருந்துச்செலவுகளும், மின்கட்டணமும் வேலைக்காரி சம்பளம் போல் 4 மடங்காகி விட்டன.

## 14 அன்பின் இனிமை, வலிமை

நான் ஓடி ஓடிப் பகட்டாக உலகத்தொண்டு புரிந்த அந்தக் காலத்தில், தேடி வந்து என் சுகம் விசாரித்துப் பரிந்தவரைக் கண்டு, "நேரத்தை வீணடிப்பவர்" என்று ஒளித்தோடுவேன். இன்று உதவ யாருமற்று, மரணப் படுக்கையில் நான் கிடக்கும்போதுதான் இப்பொழுதும் அவர் என்னைத் தேடிவந்து காட்டும் அந்த அக்கறை – பரிவின் வலிமையும், இனிமையும் எனக்குப் புரிகின்றன.

## 15 தற்புகழ்ச்சித் தாகத்தினால்....!

அடியவர் சிலரின் பணத்தில் நடந்து கொண்டிருந்த அந்தக் கோவில் திருப்பணியைப் பராமரிக்க அந்தப் பக்தர் முன்வந்து பொறுப்பேற்றபோது "புண்ணியவான்" என்று போற்றிய ஊரவர்கள், பின்பு அவர் அடிக்கடி பகிரங்க வீதியில் நின்றபடி "திருப்பணிக் கூலிகளுக்குச் சோறு கொண்டு போ" என்று தமது மகனுக்குக் கத்திச் சொல்லும் போதெல்லாம் முகம் சுளித்துக் கொண்டனர்.

## 16 வாழ்விக்கும் வாழ்த்துக்கள்

திருமணப் பந்தலில் மணமக்களுக்குத் தாம் அன்பளித்த ஆயிரங்களை எண்ணித் திட்டித் திட்டிப் பத்துக் கறி, வடை, பாயச உணவைக் கொறித்துக் கொண்டிருந்தனர் அழைக்கப்பட்ட விருந்தினர்கள். வெளியே முற்றத்து வெறுந் தரையில் அண்டாக் கருகற் சோற்றை வெறும் சாம்பாற்றுடன் ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டே மணமக்களை நெஞ்சார வாழ்த்திக் கொண்டிருந்தனர் அழையா விருந்தாளிகளான ஏழைகள்.

## 17 ஒரு தீங்கு எதிர் ஒரு தீங்கு = நன்மை

நள்ளிரவுப் பேருந்தில் வந்திறங்கி, வீட்டுக்கு நடந்து கொண்டிருந்த கந்தையரின் காற்செருப்புச் சத்தம் கேட்டு, வேலிப் பொட்டுக்களூடாகத் தெருவுக்கு ஓடி வந்த எதிர் எதிர் வீட்டு நாய்கள் இரண்டு தங்களுள் கடிபட்டு உருண்டு கொண்டிருக்க, அவர் நழுவி விரைந்து, நடந்து, பாதுகாப் பாகத் தமது வீடு போய்ச் சேர்ந்தார்.

## 18 பெண்ணை ஆள் - மண்ணை ஆள்

அந்த நாட்டு அரசின் ஒற்றை வாரிசான மற்போர் வீராங்கனை சொன்னாள்: “அப்பா! மல்யுத்தத்தில் என் மகளை வெல்லும் அரசிளங் குமரனுக்கே என் மகளையும், இந்நாட்டின் ஆட்சியையும் வழங்குவேன்” என்று பிரகடனம் செய்யுங்கள்”

“ஏன் இந்த விபரீத யோசனை மகளே?”

“மனைவியை அடக்கி ஆளும் ஓர் ஆடவனின் ஆட் சியில்தான் இந்த நாடு இனியாகிலும் சீரழிவு நீங்கி, வளம் பெற முடியும் அரசே!”

## 19 இலாபம் தராத பாபம்

ஓர் இறைச்சிக் கடைக்காரனின் மகிழுந்துச் சில்லினுள் தற்செயலாகச் சிக்கி ஒரு பூனை இறந்துவிட்டது. அவன் வண்டியை நிறுத்தி, இறங்கி நின்று கவலைப்பட்டான். அவனது கவலை எல்லாம் இது எந்த இலாபமும் தராத பாபமாயிற்றே என்பதுதான்.

## 20 அருளாளர் கிராமம்

இந்தப் பிறவியோடு தமக்கு முத்திப்பேறு வேண்டும் என்ற தியானத்தோடு அந்த மண இணையர்கள் வாழ்ந்தனர். அதனால் பொருத்தமான பக்குவர்களே பிள்ளைகளாகவும் அருளப்பட்டனர். பிள்ளைகளுக்கும் அத்தியானம் கொண்டவர்களே துணைவர்களாக அருளப்பட்டனர். அந்தப் பரம்பரையின் பத்தாவது தலைமுறையினர் மட்டும் வாழும் ஓர் அருளாளர் கிராமமே இன்று உருவாகிவிட்டது.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 21 செத்துங் காத்த தலைவர்

அந்தக் கணவர் தமது வருவாயைச் சிக்கனச் செலவு மூலம் மீதப்படுத்தி, அதனைத் தான, தர்மங்களில் செலவிட்டு இறந்தார். அவரின் மனைவி மக்கள் தங்கள் வருவாய்களை ஊதாரித்தனமாகச் செலவிட்டு ஓட்டாண்டிகளாகிக் கதியற்றுக் கலங்கி நின்றனர். 'இவர்கள் அந்தத் தர்மவானின் மனைவி, மக்களன்றோ?' என்று சமூகம் அவர்களுக்கு உதவிகள் வழங்கி ஒழுங்காக வாழ வைத்தது.

## 22 முப்பது வயது மூதாளன்

தமது தள்ளாத முதுமையிலும் முழுமூச்சாகச் சமூகத் தொண்டாற்றிவரும் ஒரு பெரியாருக்கு ஊரில் சேவை நலம் பாராட்டு விழா நடந்தது. அந்த விழாவில் பேசிய, ஊக்கமாக இயங்காத ஓர் இளைஞர் சங்கத்தின் தலைவன், "70 வயது இளைஞரான இந்தச் சமூகத் தொண்டரை 30 வயது வயோதிபனான நான் வாழ்க! வாழ்க! என்று நெஞ்சார வாழ்த்துகின்றேன்." என்றான்.

## 2 3 கோவில் குடிசையானது

அந்த ஊருக்கு மாற்றலாகி வந்து ஒரு வீட்டின் வாடகை முன்னறையில் அலுவலகம் திறந்த கிராம அலுவலா் அப்பொழுது முழுக்க முழுக்க அந்தக் கிராமத்தின் அலுவலராகவே விளங்கினார். ஆனால் காலப்போக்கில் அவா் பெருமளவில் அந்த வீட்டாரின் அலுவலராகவும், சிறிதளவு கிராமத்தின் அலுவலராகவும் மாறிவிட்டாா்.

## 2 4 மனைவிக் கடன்

"உனது சம்பளம் உனக்கும், உனக்கு வரப்போகும் மனைவிக்கும், பிறக்கும் பிள்ளைகளுக்குமே சோறு போடப் போதாது. கல்யாணத்துக்குக் கடன் கேட்கிறாயே? எப்படித் திருப்பித்தருவாய்?" "திருமணத்தன்று மகளைப் பிரியும் போது அழப் போகும் பெற்றோரிடம் "சீக்கிரம் கொண்டு வந்து விடுவேன்" என்று சொல்லியே அவளை எடுக்கப் போகிறேன். அந்தக் கடனைச் சில மாதங்களில் தீர்த்தால் உங்கள் கடனைத் தீர்ப்பேன்தானே!"

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 25 ஆத்திகப் பிரகடனம்

கடலில் தத்தளித்து, ஒரு மாணவனால் மீட்டுக் கரை சேர்க்கப் பட்ட நாத்திகனான அந்த ஆசிரியருக்குத் தாம் கேவலம் ஒரு மாணவனால் உயிர் காக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்ள மனம் ஒப்பவில்லை. அதனால் கடவுள்தான் தம் மைக் காத்தார் என்று அங்கு நின்றவர்களுக்குச் சொன்னார். மாணவனோ நாத்திகனான தன் ஆசிரியரைத் தான் காப் பாற்றியதோடு, ஆத்திகராக உயர்த்தியும் விட்டதாக மகிழ்ந்தான்.

## 26 பேராசைப் பேய்

தன் கணவனை நூறு வீதம் தன் சொத்தாகவே வைத்திருப்பதற்காக அந்தப் பெண் தம் உறவினர் அனைவ ரையும் சதிகள் மூலம் அவன் வெறுத்துக் கைகழுவ வைத் தாள். அவனது பூரண சுதந்திரம், அவளையும் மீறி, அவன் ஒழுக்கம் தவறி நடக்கத் தூண்டிற்று. அவனைத் திருத்த யாரினது உதவியும் கிடைக்கவில்லை. முடிவில் தன் கணவனை அவள் முற்றாக இழக்க நேர்ந்துவிட்டது.

## 27 ஏமாற்றாதே! ஏமாறாதே!

பேருந்தில் நடத்துநர் உரத்துக் கோரியும் தன் வாழைக் குலைக்குக் காவு கட்டணஞ் செலுத்தாமல் ஒளித் திருந்தான் ஒரு பயணி. யாரோ ஒரு புத்திசாலி அதற்கான கட்டணஞ் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்று, அடுத்த தரிப்பில் வாழைக் குலையோடு இறங்கினான். அப்போது தடுக்கப் போய்த் தோற்றதோடு, நடத்துநரின் அடி, உதைக்கும் ஆளானான் உண்மை உரித்தாளி.

## 28 துடம் புரண்ட 'சோஷல் மூவ்மென்ட்'

நீண்ட காலத்துக்குப் பின்பு சுமங்கலியாய்க் காண நேர்ந்த ஓர் இளம் பெண்ணிடம் ஓர் உறவுக்காரக் கிழவி கேட்டாள்; "உன் கணவன் யாரடி பிள்ளை?"

"ஞாபகம் இல்லை. பொறுங்கள். திருமண அல்பம் பார்த்துச் சொல்லுகிறேன்"

"திருமண அல்பம் எது என்றது மட்டும் உனக்கு ஞாபகம் இருக்கப் போகிறதோ?"

## 29 7வயதுப் பாட்டி அம்மா

அந்த 2ஆம் வகுப்பின் அதிவிவேக, குறும்புக்கார மாணவியை ஆசிரியை வழமைபோல் "பாட்டியம்மா!" என்றழைத்துப் பாடநூலைத் தரும்படி கேட்டாள். அவள் இருந்த படியே நூலை நீட்டினாள். ஆசிரியை அதிர்ந்து நிற்க, எழுந்து நின்றவள், "பாட்டியம்மா என்றால் இருந்தபடிதானே தருவார். தெரியாதா ரீச்சர்?" என்று இருகைகளாலும் நூலை ஒப்படைத்துச் சிரித்தபோது, ஆசிரியை உள்ளம் சிலிர்த்தாள்.

## 30 வலது குறைந்த சுவாமி

தனது பிரச்சினைக்குத் தனது கோவிற் சுவாமியிடம் நீதி கிடைக்கும் என நம்பி அவரையே வேண்டாமல் நண்பகல் பூசையையும் கைவிட்டு, நீதிமன்றத்தையே நம்பி ஓடினார் குருக்கள். அதனால் அவரது கோவிற் சுவாமியை வலது குறைந்த சுவாமி என்று எண்ணி ஊர் மக்களும் வழிபடுவதை நிறுத்திக்கொண்டனர். இப்பொழுது அந்தக் கோவில் வெறிச் சோடிக் கிடக்கிறது.

## 31 ஏழ்மையின் இன்பம்

அவர் ஏழையாக இருந்த காலத்தில் பரிந்து ஆறு தலளித்த அயல், சுற்றம் அவருக்குப் பணம் வந்தபின் எரிச்சல் கொண்டு, பொய்க் குற்றச்சாட்டுகளுக்கும், கட்டுக் கதைகளுக்கும் ஆளாக்கி, அவரை வதைக்கின்றன. இதிலும் பார்க்க ஏழையாகவே என்றென்றும் இருந்திருக்கலாமோ என்று பதறுகிறார் அந்தப் புதிய பணக்காரர்.

## 32 எடுப்பது பிச்சை பிழைப்பது பதவி!

அந்த ஆலய வாயிலில் குந்தித் தண்டற் பிழைப்பு நடத்தும் அநாதைச் சிறுவர்களின் சங்கம் இளம் பிச்சையர் சங்கம். 10 ஆண்டுகளில் அந்தச் சங்க நிர்வாகிகளுக்குத் திருமணம் நடந்ததையடுத்து 'இளம்' ஐ நீக்கிப் "பிச்சையர் சங்கம்" எனப் பெயர் மாற்றி அவர்கள் பதவிகளில் தொடர்ந் தும் ஒட்டிக்கொண்டனர். மேலும் 10 வருடங்கள் கழிந்தபின் தன், தன் புதல்வனைத் தன், தன் பதவியிலமர்த்தியதுடன் அவர்கள் மீண்டும் சங்கத்தின் பெயரை "இளம் பிச்சையர் சங்கம்" ஆக்கினர். நாட்டுச் சூழ்நிலைகள் காரணமான சங்கயாப்பு மாற்றமே இப் பெயர் மாற்றங்களுக்குக் காரணம் என்று சாட்டும் சொல்லப்பட்டது.

## 3 3 காதல் மணங்கள்

பட்டி மன்றம் ஒன்றில் ‘காதல் திருமணங்களே பெரும்பான்மை’ என்ற கன்னையின் சார்பில் வாதிட்ட ஒருவன் கூறியது: “ஆண் பெண் திருமணங்களில் பாதித்தொகை காதல் திருமணங்களே! தன்னினச் சேர்க்கைத் திருமணங் களோ நூற்றுக்கு நூறு காதல் திருமணங்களே. பேச்சுக்கால் திருமணம் ஒன்று கூடஇல்லை. எனவே உலகில் மிகப் பெரும்பான்மை காதல் திருமணங்கள்தான்”.

## 3 4 கல்வி வளர்த்த காஞ்சிரைகள்

ஏலத்தில் விற்கப்பட இருந்த ஒரு 50 பரப்பு நிலத்தை, அந்த நகர சபையின் விளையாட்டுத்திடலுக்காக, முடிந்தால் 50,000 ரூபாவுக்குள் ஏலங்கேட்டு வாங்கும்படி நகரசபை நம்பி அனுப்பிய ஓர் உச்சப்படிப்பாளி தன் ஒரு நண்பனையும் ஏலத்தின்போது வரச்செய்திருந்தார். ஏலத்தின் உச்சத்தில் படிப்பாளி 50,000 ரூபா கேட்டார். நண்பன் 51,000 ரூபா கேட்க, காணி அவனுக்கே ஆகியது. இரகசியமாகப் படிப்பாளி பெயரில் காணிக் கொள்வனவு உறுதி எழுதப்பட்டுப் பின்னர் 5 இலட்சத்துக்கு அது விற்கப்பட்டது. ஈழத்தமிழரிடையே கல்விப் பசளை வளர்த்துவிட்ட ஏராளம் காஞ்சிரைகளில் அதுவும் ஒன்றாகும்.

## 35 புற்றில் புகுந்த புடையன்

கறையான்கள் தாங்களே அமைத்துக் காலங் காலமாக வாழ்ந்து வந்த புற்று அது. அதற்குள் அடாத்தாகப் புகுந்து கறையான்களைத் தின்றழித்து ஆட்சி பிடித்த புடையன் இரவில் வெற்றிக் களிப்பில் "சில் சில்" கீதம் பாடலாயிற்று, அந்த வீட்டார் புடையன் வாழ்ந்த புற்றை அடையாளம் கண்டு, அதற்குள் மண்ணெய் ஊற்றினர். சீறிக் கொண்டு வெளியே வந்த புடையனை அடித்துக் கொன்றனர். புற்று மீண்டும் கறையான்களின் வாழ்விடமாயிற்று.

## 36 கேட்டதும், கிடைத்ததும்

ஒரு கோவிலைக் கட்டிய இருவரிடமும் முகாமைத் துவம் வேண்டுமா? புண்ணியம் வேண்டுமா? என்று கடவுள் கேட்டார். முகாமைத்துவம் கேட்டவருக்கு கடவுள் மணியக் காரப் பதவியை வழங்கினார். அவர் அதிகாரப் போதையில் குற்றங்கள் பல புரிந்து, அவை உறுதிப் படுத்தப் பட்டு, முதுமையில் சிறை சென்றார். புண்ணிய வரங்கேட்டுப் பெற்ற மற்றவர் காலமெல்லாம் கடவுள் தொண்டில் இன்பங் கண்டு, ஈற்றில் ஆனந்த முத்தியும் பெற்றார்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 3 7 புண்ணியம் காக்கும்!

தன் மனைவியின் கட்டளைப்படி தன் தந்தைக் கிழவனை வீட்டை விட்டுக் கலைத்தவன் அவருக்குச் சொன்ன பொய்க்காரணம்: "பெரியவரே! என் அம்மா நீங்கள் என் உண்மையான அப்பா இல்லை என்று சாக முன் எனக்குச் சொன்னவர். ஆயினும் யாரோ பெற்ற என்னை நீங்கள் வளர்த்துவிட்ட புண்ணியம் உங்களை நிச்சயம் காப்பாற்றும்! புறப்படுங்கள் பெரியவரே!"

## 3 8 மனிதும் செத்த மனங்கள்

உடையார் தமது மனைவியிடம், "படலையிலே பார் பரமர்! ஏதோ பணக் கடனுதவி கேட்கத்தான் வருகிறார். பார்! ஆளை அங்கு வைத்தே திருப்பிவிட்டுக் காட்டுகிறேன்." என்று குசு குசுத்துவிட்டு, உரத்த குரலில் "பரமு அண்ணே! உங்களிடம் ஓர் 1000 ரூபா இரவலாகக் கேட்க வர இருக்கிறேன். வரலாமா?" என்றார். பரமர் வந்த வழியில் பெருமூச்சோடு திரும்பினார். உடையார் மனைவியைப் பெருமிதத்தோடு பார்த்தார்.

## 39 நாம் ஒன்றை நினைக்க...?

"உந்த ஆசிரியர் அகதியாய் இங்கு வந்தவர். நாளை உங்களைக் கைவிட்டுப் போய்விடுவார். நிரந்தரமாய் இங்கு வசிக்கும் என்னிடம் நீங்கள் வந்தால் அப்படி நேராது!" என்று மாணவர்களை இழுத்து வைத்துப் படிப்பித்த ஆசிரியர், அகதி ஆசிரியர் ஊர் திரும்ப முன்னமே எதிரிகளுக்கு அஞ்சி அகதியாக வெளிநாட்டுக்கு ஓடித்தப்ப நேர்ந்து விட்டது.

## 40 கிடைக்கும் இடத்தில் கேள்!

தன் கொடிய நோயைத் தீர்த்து உதவும்படி ஒரு மகன் மருத்துவரையும், தன்னை வேலையை விட்டு நீக்கவேண்டாம் என்று ஒரு மகன் முதலாளியையும், குடிக்க வேண்டாம் என்று ஒரே மகள் தன் கணவரையும், மக்களை அழிக்காதீர் என்று ஒரு மகன் அரசினரையும் கும்பிட்டுக் கும்பிட்டு அழுதனர். அப்பா சொன்னார்: "முழு முழு முட்டாள்களே! உந்தப் பாபச் செயல்களுக்குப் பதிலாகக் கடவுளை மட்டும் நம்பிக் கும்பிடுங்கள்! எல்லாம் வெற்றியாகும்."

## 41 ஞானத் தேனீ

தத்துவங்கள், அநுபவங்கள் மயமாகப் பாடம் நடத்தும் ஆசிரியரை, “இத்தனை நூறு அனுபவங்களைத் தனி ஒருவராக நீங்கள் எப்படிப் பெற்றீர்கள்?” என்று வியந்த மாணவனுக்கு அவர் கூறிய பதில்: “நான் பட்டறிந்தவை கால் பங்கு மட்டுமே. கேட்டறிந்தவை, பார்த்தறிந்தவை, கற்பனையில் மின்னி அறிந்தவை, படித்தறிந்தவை மிகுதி முக்கால் வாசி. அங்கங்கே சந்திப்பவற்றை அவ்வப்போதே அலசித்தெளிந்து, என் மனதில் ஆழப் பதித்து விடுகிறேன். அவ்வளவுதான்!”

## 42 மது கைவிடேல்!

தாய் : மகனே! உன் குடும்பத்தைத் தினமும் கலங்க வைக்கும் குடியை இனியாவது கைவிடு ஐயா!

மகன் : உனக்கு ஊக்கம் தர, மதுவைக் கைவிடாதே! ‘ஊக்கமது கைவிடேல்’ என்று ஔவையாரே சொல்லிவிட்டார் அம்மா!

தந்தை : அடிச்சக்கை என்றானாம். நம் பகுத்தறிவு வாதிகளையும் மிஞ்சிவிட்டாய் மகனே! அந்தோ ஔவையே!

## 43 ஒரு சமயம் ஒரு கழுதை மட்டும்

அந்தச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் நடந்து கொண்டி ருந்தது. சபையில் பலர் எழுந்து நின்று தலைவர் புரிந்த ஊழல், மோசடிகள் பற்றிச் சரமாரியாய்க் கேள்விகள் கேட்டனர். ஆத்திர மடைந்த தலைவர், "one donkey at a time – ஒரு நேரத்தில் ஒரு கழுதை மட்டும் பேசு" என்றார். சபையில் ஒருவர் எழுந்து "அப்படியானால் தலைவரே பேசுங்கள்!" என்றார்.

## 44 அநாதைகளான அப்பாவிகள்

தானும் இல்லறம் நடத்தவேண்டும் என்ற பேராசை யால் குரூரத் தோற்றம் கொண்ட ஒருவன் தன்னைச் செயற் கையாக அழகுபடுத்தித் திருமணம் செய்து கொண்டான். காலப்போக்கில் செயற்கை அழகுகள் ஒவ்வொன்றாக அகன்று வரக் கண்டு, மோசமாகி வந்த மனைவியின் புறக்கணிப்புத் தாங்காமல், தன் 3 பெண்பிள்ளைகளையும் அநாதைகளாக விட்டு, ஒருநாள் அவன் தற்கொலை புரிய நேர்ந்து விட்டது.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 45 செய்வன செய்ய......!

தன் தாயின் மருத்துவ, மரணச் செலவுகளைக் கடன்பட்டும் கைகூசாமல் செய்ததால் கைமுதல் அழிந்துவிட, பயிரிடாமல் சுருட்டுக் கூலித்தொழிலுக்குச் சென்றார் அந்த விவசாயி. ஆனால் அருகிலிருந்த சந்தையிலிருந்து அவரது தோட்டத்துள் மழைவெள்ளம் அள்ளி வந்து பரப்பிவிட்ட கடகப் பூசணி விதைகள் முளைத்துப் படர்ந்து காய்த்து, பயிரீட்டின் மூன்று மடங்கு வருவாயைத் தந்துவிட்டன.

## 46 இது சிறிய அதர்மம்

சாராயத்தில் தண்ணீர் கலந்து விற்கும் கடைக்கார னிடம் "ஏனிந்த அதர்மத்தைச் செய்கிறாய்?" என்று கேட்ட குடிகாரனுக்கு அவன் சொன்ன பதில்: "அப்பாவிப்பெண்கள், குழந்தைகளை வதைப்பிக்கும் சாராயத்தை விற்றுப் பிழைக் கும் மாபெரும் அதர்மத்தையே கூசாமல் செய்யும் நான், கொடிய குடிகாரரை ஏமாற்றும் இந்தச் சிறிய அதர்மத்தைச் செய்யக் கூசுவேனா?"

## 47 தண்ணீரும் இனிக்கும் சாப்பாடு

ஒரு புதுமணப் பெண் தான் உணவோடு தரும் தண்ணீரும் இனிப்பதாகத் தன் கணவன் புளுகியதாகத் தன் தாயிடம் சொல்லிக் குதூகலித்தாள். கலக்கமுற்ற அன்னை, "உப்புக் கரிக்கும் உணவை உண்டபின் குடிக்கும் நீர்தான் இனிப்பதுபோல் தெரியும். மகளே! உப்பை மட்டாக உணவில் சேர்க்கும்படிதான் சொல்லாமல் சொன்னார் உன் கணவர்!" என்றாள். தன் கணவரின் நாகரிகச் செயலையும் நயந்து மகிழ்ந்தாள் மனைவி.

## 48 "ப்பூ.... உது பெரிய புதினமா?"

அந்த இல்லத்தரசி தன் நண்பிக்குச் சொன்னாள்: "நான் தினமும் காலையில் படுக்கை விட்டு எழும்பும் போது கணவரின் கால்களைத் தொட்டுக் கும்பிடுவேன்!"

"அப்படியா? இரவு படுக்கப் போகும்போது?"
"அப்போது கணவர் அதைச் செய்வார்!"
"ப்பூ..... உது பெரிய புதினமா?"

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 49 எல்லாம் நன்மைக்கே!

தன் கணவரை வெளிவாயர் என்று தள்ளிவைத்துப் பிள்ளைகளுடன் மட்டும் கூடித் தந்திரத் திட்டங்கள் வகுத்துச் செயற்பட்டு வந்தாள் அந்த வீட்டுக்காரி. தாம் தடுத்தும் கேளாத அவர்களின் பொய், புரட்டை வெறுத்துத் தாமும் ஒதுங்கியே நடந்தார் கணவர். ஒரு போலி நகை மோசடியில் குடும்பம் காவல் துறையிடம் சிக்கியபோது கணவருக்கு ஒன்றுமே தெரியாது என்ற உண்மை வெளிப்பட்டு, அவர் மட்டும் விடுதலையானார்.

## 50 தந்தை, தாய்க் கொலை

புலால் உண்ணாத ஆனால் குடிக்கிற அண்ணன் தன் தம்பியிடம் " நீ புலால் உண்பதால் தினம் ஒன்றிரண்டு உயிர்கள் கொல்லப் படுகின்றனவே" என்றான். குடிக்காத அந்தத் தம்பி "நீங்கள் குடிப்பதால் அண்ணியும், பிள்ளையும் தினம், தினம் கொல்லப் படுகிறார்களே?" என்றான். "அவற்றின் மூலம் எங்களையும்தான் நீங்கள் இருவருங் கொல்கிறீர்கள்" என்றனர் அம்மா, அப்பா!

## 51 பெற்றோர்க்கான கடமை மறந்து....!

அந்த ஏகபுதல்வனின் தந்தை இறந்தபோது அவனது மனைவி கருவுற்றிருந்ததால் அவன் தந்தை உடலுக்குக் கொள்ளியிட மறுத்துவிட்டான். ஆனால் அந்தக் கரு ஆண் சிசு செத்தே பிறந்தது. பின் பிறந்தவை அனைத்தும் பெண்களே. அதனால் அவனுக்குக் கொள்ளி வைக்க மட்டுமன்றி அவன் சந்ததி வாரிசாய்க் கூட ஓர் ஆண்பிள்ளை யேனும் கிடைக்கவில்லை.

## 52 அன்றில்களோ அன்றில்கள்!

மணமாகிப் பல ஆண்டுகள் கழிந்தும் குழந்தை கிடைக்காத அந்தக் கணவன் தன் மனைவியின் அன்பு தன் மீது மட்டுமே இருப்பதற்கு அது அனுகூலமாய் உள்ள தென்று மன நிறைவுற்றான். ஒரு சமயம் தன் மனைவியிடம், "உனக்குக் குழந்தைத் தாகம் இல்லையா?" என்று கேட்டான். அதற்கு அவளும் "இல்லை! காரணம் குழந்தை கிடைத்தால் என் மீதான உங்கள் அன்பு அந்தக் குழந்தைமீது திரும்பி விடுமே என்ற பயம் தான்!" என்றாள்.

## 53 நழுவல் நாடகம்

மனைவி நடத்தையைச் சந்தேகித்து வாதாடிய கணவனிடம் "அக்காள் பத்தினி" என்று அவள் தம்பி வாதிட்டான். "உன் இந்தத் தம்பியைக் கீழே கிடத்திக் கடந்து, "நான் பத்தினி" என்று சத்தியம் பண்ணு பார்க்கலாம்!" என்று அவளைக் கணவன் கேட்டுக் கொண்டிருந்த போது அந்தத் தம்பி தப்பி ஓடிக் கொண்டிருந்தான்.

## 54 கடவுளின் தயக்கம்

தமது 4 பெண் பிள்ளைகளுக்குப் பலமாக ஓர் ஆண் பிள்ளையும் வேண்டுமென்று உக்கிரமாகக் கடவுளை வழிபட்டு வந்த அவருக்கு ஐந்தாவதும் பெண்ணாகவே பிறந்தது. அந்த ஆத்திரத்தில் கடவுளைத் திட்டி நாத்திகரான அவருக்கு ஆறாவது பிள்ளை ஆணாகப் பிறந்து, ஊதாரியாகவே வளர்ந்து, அக்காள்மாரைப் பலப்படுத்துவதற்குப் பதில் அவர்களைக் கருவறுத்துப் பலவீனப்படுத்தினான். இதைக் கண்டபோதுதான் கடவுள் தாம் கேட்ட வரம் தர மறுத்தது ஏன் என்பது அவருக்குப் புரிந்தது.

## 55 கனடா 1 கோடி = திருமலை 3 மாடி

கனடாவில் தான் பிடித்த 50, 100, 500 டொலர் சீட்டுக்கள் மூலம் தன்னை மிக்க யோக்கியவதியாக 3 ஆண்டுகள் நம்பகம் வளர்த்துவந்த அமுதா 4ஆம் ஆண்டு தொடங்கிய 1000, 2000 டொலர் சீட்டுக்களின் முதல் மாதக் கட்டுப்பணங்கள், வாடிக்கையாளர்கள் நம்பி விட்டு வைத்த தொகைகள் என மொத்தம் 1 இலட்சம் டொலர்களுடன் தலைமறைவாகி விட்டாள். ஆயினும் திருகோணமலையில் அவள் பெயரில் 3 மாடிக் கட்டடம் வாங்கப்பட்டு விட்டதாம்.

## 56 பறையடிப்பும் படியமைப்பும்

இசைத்திறனோ, ஈடுபாடோ இல்லாத பரம்பரையில் வந்த தாயின் மகன், தந்தையின் பரம்பரை இசை ஞானத்தால் ஜேர்மனியே போற்றும் உன்னத பாடகனாகியிருந்தான். தந்தை உறவினர் காசை அள்ளி இறைத்து அவனை இந்தியாவில் இசை கற்க வைத்து அவனை உலகே மயங்கும் பாடகனாக்கினர். தாயின் உறவினரோ அது தங்கள் சந்ததித் திறமை தான் என்று பறையடித்து விலாசம் எழுப்பித் திரிந்தனர்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 57 யார் துணையில் யார்?

யாழ்ப்பாணத்தில் சந்தித்த ஒரு நண்பர் "மகனுடனா வசிக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு "இல்லை! மகன் என்னுடன் வசிக்கிறான்!" என்று பதிலளித்த ஒருவர், 5 ஆண்டின் பின் பிரான்சில் சந்திக்கையில், அந்த நண்பர் "உங்களுடனா மகன் வசிக்கிறார்?" என்று கேட்டபோது "இல்லை! அவனுடன் நான் வசிக்கிறேன்!" என்று பதிலளித்தார்.

## 58 மனைவியின் கணவரின் மகன்

புதிதாக முளைத்த அந்தக்கள்ளக் கடத்தற் பணக்காரனுக்குப் பல தம்பிகள், மைத்துனர்களும் புதிதாக முளைத்தனர். அவர்களில் ஒருவன், "என் சித்தப்பாவின் மனைவியின் அக்காளின் கணவரின் தம்பி மனைவியின் கணவரின் மகன்தான் - என் கிட்டிய உறவுதான் இவர்" என்று சொல்லி, அவனுக்கு முன்னும், பின்னும் "அண்ணே, அண்ணே" என்று திரிந்து, தானும் ஓர் அரிசி ஆலைக்கு முதலாளியாகி விட்டான்.

## 59 கைப்பேசியின் கருணை

அந்தக் கன்னி தன் இரகசியக் கடிதத்தில் தன் காதலைச் சொல்லி, அவனது விருப்பங் கோரியிருந்தாள். அன்று மாலை தாயுடன் அவள் வீதியில் எதிரில் வந்து கொண்டிருந்தாள். அவன் கைப்பேசியை எடுத்துக் காதில் வைத்தபடி வந்து, அவளருகில் வந்ததும், “கடிதங் கிடைத்தது மச்சான். எனக்குப் பூரண சம்மதமடா!” என்றான். கைப்பேசியைக் கண்டுபிடித்தவனை இரு உள்ளங்கள் வாழ்த்தின.

## 60 பாசத் தெய்வீகம்

விவாகரத்து வழக்கு விசாரணை முடிவுற்றது. பஞ்சாயத்துத் தலைவர் “கணவனும், மனைவியும் மணவிலக்குக்குச் சம்மதம். பிள்ளைகள் பெற்றோரில் ஒருவர் பிரிந்தாலும் செத்துவிடுவோம் என்கிறார்கள். இந்தத் தெய்வீகப் பாசம் நிச்சயம் மிருக மனங்களை மனித மனங்களாய்த் திருத்தும் என்று நம்பி, இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்” என்று தீர்ப்பளித்தார்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 61 இரத்தத்தில் ஊறிய நம்பிக்கை

உண்மைத் தந்தையைக் கண்டறிவதற்கான மரபணுச் சோதனைகள் மயமான ஒரு நாட்டுத் தொடருந்தில் பயணித்த ஓர் ஆசியக் குடியேறியிடம் ஒரு சுதேசி, அங்கிருந்த பிள்ளைகளைக் காட்டி, "உன் பிள்ளைகளா?" என்றான். "நிச்சயமாக என் மனைவியின் பிள்ளைகள். மேலும் எங்கள் தாயக நம்பிக்கை மரபின்படி எனதும் பிள்ளைகள்தான்!" என்றான் அந்தக் குடியேறி ஆசியன்.

## 62 இருதாரக் குற்றம்

சாதகப்படி தனக்கு இரண்டு தாரம் என்று அறிந்து கலங்கிய அந்த இளைஞன், பாரதக் கதையில் காந்தாரிக்குக் கணவனாக ஓர் ஆட்டுக் கடாவைப் பாவனை பண்ணி, முதல்தாரக் குற்றம் நீக்கியதை நினைத்தான். தன் செலவில் ஊரில் "வள்ளி திருமணம்" நாடகம் நடத்தி, தான் முருகனாக நடித்து, வள்ளியாய் வந்த ஓர் ஆணுக்குத் தாலி கட்டி, ஒருதாரக் குற்றத்தை அவன் தீர்த்துக் கொண்டான்.

## 63 அவளும் அழுதாள்!

மரணப்படுக்கையில் கிடந்த அந்தத் தந்தை, சூழ்ந்து அழுது நின்ற தமது பிள்ளைகளைப் பார்த்து, "பிள்ளைகளே! நான் இறந்த பின்னும் உங்கள் அம்மாவின் தாலியை அகற்ற வேண்டியதில்லை!" என்று கூறிய இறுதி வார்த்தைகளைக் கேட்டு, அழாமல் நின்ற அவரது மனைவியும் திடுக்கிட்டு விழித்து, அழத்தொடங்கினாள்.

## 64 என்றோ விதைத்து இன்றே அறுத்து..!

அண்ணனிடம் பிடிபடாமல் குடித்து வந்த இளைஞன் மனம் திருந்திக் குடியைக் கைவிட்டான். பின் ஒரு நாள் கள்மயக்கத்தில் தெருவில் கிடந்த ஒருவனைத் தூக்கிக் காப்பாற்றி விட்டுத் தம் வீடு திரும்பினான். அவனில் கள்வாடை அடிப்பதை உணர்ந்து கொண்ட அண்ணனால் அவன் "குடிகாரா" என்று திட்டித் தண்டிக்கப் பட்டான். பிழையின் போது தவறிய தண்டனை பிழைசெய்யாத வேளையிலேனும் கிடைத்தேவிட்டது.

## 65 உண்மைத் தியாகிகள்

"நம் முன்னோர்கள் கடவுளை நோக்கி உண்ணா நோன்பிருந்து கேட்டவரம் பெற்றனர். உயிரையும் தியாகம் செய்யவில்லை. ஆனால் நாங்களோ இன்று மானுடர்களை நோக்கி உண்ணா நோன்பு இருந்து இலட்சியங்களையும், உயிர்களையும் சேர்த்து இரட்டைத் தியாகம் செய்கிறோம். எனவே நாங்களே உலகின் உண்மையான பெரிய தியாகிகள்." என்ற அந்தத் துறவியின் பிரசங்கத்தைக் கேட்டுச் சபையிலிருந்த சிலர் மனம் திருந்தினர்; பலர் மனங்குமுறினர்.

## 66 தவித்த முயல் அடித்தோரும்...!

யுத்த காலத்தில் தீவகத்திலிருந்து அகதிகளாக யாழ்நகரில் வந்து தங்கிய மக்கள் அன்றாட உணவுக்காகத் தமது உடைமைகளை விற்கும் நிர்ப்பந்த நிலையில் இருந் தனர். அவர்களிடம் மிதிவண்டிகள், தையல் இயந்திரங்கள், வானொலிப்பெட்டிகள் போன்றவற்றைக் கால்வாசி விலை களுக்குத் தவித்த முயலடித்த யாழ் நகர வாசிகள் சற்றும் எதிர்பாராத விதமாக வலிகாம மக்கள் அனைவரும் செம்மணியூடாக வெளியேற நேர்ந்த போது அவற்றைத் திருடர்களுக்கு அன்பளிப்பாய் வைத்துச் சென்றனர்.

## 67 தானே தன் சதிக்குச் சாட்சி

"உன் வீட்டாருடன் சேர்ந்து நீயும் உணவில் நஞ்சு போட்டுக் கொடுத்து, உன் கணவனைப் படுகொலை செய்ய முயன்றாயாமே?"

"ஐயோ! அப்படிக் கொலைவிரும்பியாக என்னைக் காட்டவுங் கதை கட்டுகிறானா? கொடியவன் செத்துத் தொலைகிறானில்லையே!"

## 68 காலங் கேட்கும் ஓய்வு

"இளம் குடும்பத் தலைவனாய் நான் இருந்த காலத்தில், வீண் பிரபஞ்சக் கனவுகளில் மாளுவேன் என்றுதான் நான் கெஞ்சியும் கடவுள் எனக்கு அப்போது ஓய்வு நேரங்கள் தரவே இல்லை. இதை உணராமல் அன்று அதற்காகக் கடவுளைத் திட்டினேனே!" என்று அந்த முதியவர் என்னிடம் கவலைப்பட்டார். அத்தோடு "வாழ்வின் பொய்ம்மை விளங்கியுள்ள இந்த முதுமையில் முத்திக்கு வழிபடப் போதிய ஓய்வை அருளவுஞ் செய்கிறான் ஆண்டவன்" என்றும் அவர் மனமுருகினார்.

## 69 குறும்பார்வைக் குருடன்

தங்கள் அம்மப்பா பேசிய சீதனத்தைக் கேட்டு அம்மாவை வதைப்பது பழி என்று வாதாடிய பிள்ளைகள் தம்மை அவமதித்ததாகக் கோபித்து, அவர்கள் பசியில் வாடவும், வயல் காடு மண்டவும் விட்டுச் சென்ற தன்மானச் சிங்கமான தகப்பன், எவனோ பணக்காரன் வீட்டில் இடிபட்டும், ஏச்சு வாங்கியும் 'மானமாக' அடிமை செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

## 70 சென்னைமாநகர் வீதிகளில்!

தமது தலயாத்திரை, ஆலய தரிசனம் பற்றிக் கேட்ட வருக்கு அந்தப் புலத்தமிழர், "ஆம்! தமிழ்நாட்டில் அழகுமிகு கோவில்களைத் தரிசித்தேன். வாகன நெரிசல் மயமான சென்னை நகர வீதிகளில் கடவுளைத் தரிசித்தேன். தினம் நிகழக் கூடிய ஆயிரமாயிரம் விபத்துக்களை, சாரதிகளின் பொறுமை, விழிப்பு, விரைவு, விட்டுக்கொடுப்பு என்பவற்றின் வடிவில் நின்று, நிகழாமல் தடுத்து வரும் கடவுளைச் சென்னை நகர் வீதிகளில் நெஞ்சாரக் கண்டேன்" என்று உடலும், மனமும் சிலிர்த்தார்.

## 71 பொறாமைச் சிறுமை

அந்த இசை மேதைக்குக் கிடைக்கும் உலகப் புகழை, வரவேற்பைக் கண்டு அவரது உடன்பிறப்புகளும் பெருமைப்பட்டு மகிழ்ந்தனர். ஆனால் அவர்களின் பிள்ளைகள் தங்களுக்கில்லாத வரவேற்பும், செல்லமும் மேதையின் பிள்ளைகளுக்குக் கிடைப்பதைக் கண்டு புகைந்து, புழுங்கி அந்தக் குடும்பத்தையே முற்றாக வெறுத்து விலக்கியும், விலகியும் நடந்தனர்.

## 72 ஆச்சி வயதிலும் அம்மாடி

தொடருந்தில் நான் ஒரு மூலை இருக்கை பிடித்து வசதியாக அமர்ந்திருந்தேன். அடுத்த நிலையத்தில் ஓர் இளைஞனும், கிழவியும் ஏறி என் அருகில் அமர்ந்தனர். கிழவி மெல்ல என்னிடம் "தம்பி! ஆச்சிக்கு உந்த மூலை சீற் வசதியாக இருக்கும்!" என்றாள். நான் மாறி இடம் விட்டேன். வண்டி அடுத்த நிலையத்தில் நின்றபோது இளைஞனைத் தனது மூலை இருக்கையில் இருத்திவிட்டுக் கிழவி இறங்கினாள்.

## 73 செவிட்டுப் பாக்கியம்

பக்கத்துக் கட்டிலிற் கிடந்து கொண்டு நித்திரை கொள்ளாமல், அறளை கொட்டும் கிழவி தன் கிழக்கணவரையும் உறங்கவிடாமல் "இங்கே அப்பா! பொன்னுக்கிழவி புருஷனுக்கு இப்போது காது கேட்பதில்லையாம்!" என்றாள். எரிச்சலுற்ற கிழவன் "அவன் புண்ணியசாலி" என்றார்.

## 74 புண்ணியமும் புகழும்

கட்டாக் காலிகளாகப் 'புண்ணியம்' என்னும் பசு மேய்ந்து கொண்டும், "புகழ்" எனும் அதன் மூன்று நாட்கன்று ஓடி விளையாடிக்கொண்டும் நின்றன. மாலையில் வீட்டுக்காரி முதலில் கன்றைப் பிடிக்கப் போக, தாய்ப்பசு அவளை மூசி விரட்டிற்று. அவள் ஓடிப்போய்க் கணவனிடம் சொன்னாள். அவன் சிலேடையாக, "புண்ணியத்தை நம் வசமாக்கப் புகழ் தானாகப் பின்னால் வருமே!" என்றான்.

## 7 5 தீங்கிடையும் தீண்டாமை

யாழ் - வலிகாமம் மக்களின் செம்மணியூடான இடம்பெயர்வின் இரண்டாம் நாள் மதியம். கண்டிவீதியில் சாதிமான் சொக்கரின் பிள்ளைகள் தாகத்தால் துடித்தனர். இதைப் பார்த்த அவர் ஊரவன் பரமன் பறந்தோடி எங்கிருந்தோ தண்ணீர் கொண்டுவந்தான். சற்று யோசித்த சொக்கர் தமது பாத்திரத்துக்கு அந்தத் தண்ணீரை மாற்றியே தம் பிள்ளைகளுக்குப் பங்கிட்டார்.

## 7 6 பிறர் துயரில் பங்கேற்று....!

"சாமீ! தான் ஓட்டிச்சென்ற சிற்றுந்துவே முட்டைக் கோதுபோல் நொருங்கியும் என் பிள்ளை எப்படி உயிர் தப்பினான்? நம்பமுடியவில்லையே சாமி" என்று வியந்த பெண்ணிடம், "பிறர் பிள்ளைகளின் மரணங்களில் துடி துடித்து நீ உன் தலைவிதிப்படியான புத்திரசோகக் கணக்கை ஏலவே தீர்த்து விட்டாய். அதனால் உன்பிள்ளை உயிர் தப்பினான்!" என்றார் சாமியார்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 77 காதலா? பாசமா?

ஒரு மேலை நாட்டுப் பெண் சொன்னாள்: "எனது மகனும், எனது முதலாவது கணவரின் மூன்றாவது மனைவியின் இரண்டாவது கணவரின் முதல் தாரத்து மகளும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள்." இதைக்கேட்ட இந்தியர் கேட்டார்: "சகோதர பாசமா? அல்லது காதல் அன்பா?"

## 78 பாவக்கிரகப் பசப்பல்

காதல் திருமண மனைவி அழுதாள்: "மனைவியின் பாவக்கிரகம் அதிகமாயிருந்தால் அது கணவனை வருத்துமாம். எனக்குப் பாவக்கிரகம் 80. உங்களுக்குப் 10. அது தான் உங்களுக்கு இவ்வளவு துன்பங்கள்".

கணவன் தேற்றினான்: "உந்தச் சாத்திரம் வெறும் பொய். துன்பப் படுவதற்கான சொந்தத் தலைவிதி எனக்கு இல்லையென்றால் கடைசிவரை துன்பங்கள் நேரமாட்டா. ஒருவர் துன்பத்துக்கு இன்னொருவர் காரணமாகமுடியாது. நீ வீணாகப் பழியை உன் தலைமேல் போட்டுக் கலங்காதே அம்மா! இறைதாளை இறுகப் பிடித்து எதையும் வெல்வோம்".

## 79 பாவங்கள் உள்ளமட்டும்......!

"கோவில்களை இடித்திடித்துக் கட்டுகிறார்களே, இது மடமைதானே?"- பகுத்தறிவுவாதி கேட்டார். கோவிற் பக்கமே போவது நின்று விட்ட ஞானி பதில் சொன்னார்: "கோவிலை இடிக்கக் கூலி கொடுப்பவனுக்கும், அதைக் கட்டுவதற்குக் கட்டுபொருள்கள், கூலி வழங்குவோருக்கும் பாவநாசமும், புண்ணிய மேம்பாடும் ஏற்படுகின்றன. நாம் பாவம் அற்றவர்களாகும் வரைக்கும் இடிக்கும், கட்டும் மடமை தொடரவே செய்யும்!"

## 80 இப்படியும் அறநெறிகள்

ஒரு பொதுக் கோவிலைத் தன் குடும்பச் சொத்தாக்கக் கள்ள உறுதி படைத்து வென்றவனின் பேர்த்தி அறநெறி கற்பிக்கும் பாடசாலையில் படித்த சிறுவர்களில் ஒருவன். கோவில்களில் உண்டியல் திருடுகிறான்; ஒருவன் பாடசாலைக்குள் குழப்பம் செய்கிறான்; ஒருவன் அங்கு திருடுகிறான்; ஒருவன் ஊருக்குள் குறிச்சி வெறி தூண்டித் திரிகிறான்.

## 81 கடைக்குட்டிப் பாசம்

அந்தப் பெற்றார் குடும்ப அக்கறையோடு ஓடி ஓடி உழைத்த தங்கள் மூத்த மகனை மேலும் மேலும் ஈவிரக்கமின்றி வாலை முறுக்க அவன் களைத்துச் சலித்துத் தாங்கமுடியாத நிலையில் வீட்டை விட்டே ஓடினான். இளைய மகனுக்கு – கடைக்குட்டி என்பதால் அதிக செல்லங் கொடுத்து ஊதாரியாக்கியதால், உழைக்கப் போகாமல், அவன் குடும்பத்தையே கருவறுத்துக் குட்டிச்சுவராக்கினான். இப்பொழுது மூவரும் நாதியற்று நடுத்தெருவில் நிற்கிறார்கள்.

## 82 அம்மாக்கள் புகழ் பாடும் அப்பாக்கள்!

அந்த இலக்கிய விழாவில் பேசிய அனைவருமே பிரமச்சாரிகள். “ஏன் இப்படி?” என்று விழாச் சபையினரிடம் கேட்டபோது “அப்பாமாரைப் பேசவிட்டால் தம், தம் மனைவி மாரைப் புளுகுவதற்கும் அதிக நேரம் எடுத்துவிடுகிறார்கள். அதனால் குறித்த நேரத்துக்கு விழாவை முடிக்க முடிவ தில்லை.! அதனால்தான் இந்தக் கட்டுப்பாடு” என்றனர்.

## 8 3 ஒப்புதல் வாக்குமூலம்

"என் பிள்ளை அவள். நடத்தை பிசகுவாளா? கணவனின் ஆண்மைக்குறைதான் அவள் கற்பை அழித்தது" – தாய் முழங்கினாள். "அப்படியானவனை ஏன் அவளுக்குக் கட்டிவைத்தீர்கள்?" என்று கேட்டு நின்ற அயற்பெண்கள் வினாவினர். "அவன் விடயத்தில் மட்டும் உரிய காலத்தில் பரீட்சித்துப் பார்க்கத் தவறிவிட்டேன்!" என்றாள் அந்தத் தாய்.

## 8 4 அமிர்தக்கண் அன்னை

மிதிவெடியில் சிக்கி, ஒரு காலின் கீழ்ப்பாதி அகற்றப் பட்டுக் கிடந்தவனைச் சூழ்ந்து நின்று அனைவரும் கடவுளைத் திட்டினார்கள். தாய்மட்டும் பாழ்விதியின் மத்தியிலும் தன் மகனின் அரிய உயிரும், உடலின் 88 வீதமும் காப்பாற்றப்பட்டதை நினைந்து கடவுளுக்கு மனமார நன்றி சொல்லிக் கொண்டு நின்றாள்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 85 மாணவர் வைக்கும் பரீட்சை

அந்த விவேகிகளின் வகுப்பறைக்குள் அந்தப் புத்தம் புதிய தமிழ்ப்பாட ஆசிரியர் நுழைந்தார். மாணவன் ஒருவன் எழுந்து, புதிய ஆசிரியரை ஆழம் பார்க்கும் தங்கள் வழமைப்படி, அவரிடம் "குண்டன் என்பதற்குப் பெண்பால் என்ன ஐயா?" என்றான் பணிவாக! ஆசிரியர் குறுநகையோடு "குண்டள்" என்றார். "சேர் அதி திறமைச் சித்தியடா!" கிளு கிளுத்தன கிசு கிசு குரல்கள் பல!

## 86 அகம்பாவம் பெரும்பாவம்

மகன் : "மாடாசாமீ எனக்கும் அருள் செய்திடு!"

தந்தை : "அட கொடியவனே! போயும் போயும் ஒரு மாடசாமியைக் கும்பிடுகிறாயே!"

பாட்டன்: "மகனே! எந்த மேலான சக்தியையும் நம்பிக் கும்பிடாத அகம்பாவங் கொண்ட நாத்திகனான உன்னை விட, ஏதாகிலும் தனக்கு மேலான ஒரு சக்தி உண்டென்று நம்பும் அகந்தை அற்ற உன் மகன் ஆயிரம் மடங்கு பக்குவம் கொண்டவன். புரிந்து திருந்து!"

## 8 7 இராவணன் மீசை

தாவர இயல் பாடவகுப்பில் ஆசிரியர் கேட்டார்: "இராவணன் மீசை எங்கே வளரும்?" ஒரு மாணவன் "இராவணனின் முகத்தில், மேலுதட்டில் சேர்!" என்றான். இன்னொருவன் "அது பிழை சேர்! இராவணனின் 10 முகங்களின் மேலுதடுகளில் என்பதே சரி" என்றான்.

## 8 8 பாவிகள் பிறக்கும் நாடு

"இந்தத் தீவில்தானே அம்மா வெள்ளப் பெருக்குகள், உயிர் கொல்லித் தொற்று நோய்கள், இன, மத மோதல்கள், சுநாமிகள் மாறி மாறி வந்து மக்களை வதைக்கின்றன?"

"உலகமெங்கும் வாழ்ந்து சாகும் பஞ்ச மாபாதகர்கள் எல்லோரும் தண்டிக்கப்பட என்று இங்குதான் கடவுளால் பிறக்க வைக்கப் படுகிறார்கள். அவரவரும் அவரவர் கடவுள் கால்களில் விழுந்து கதறி, மனம் திருந்தி, மன்னிக்கப்படுவதே உள்ள ஒரேயொரு மீளும் வழி மகளே!"

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

## 89 கடவுளுக்குக் கம்மி விலை நெய்

ஒரு சாமியார் ஒரு கடையில் நெய்விலை கேட்டார். கடைக்காரன் "சாப்பாட்டு நெய் 100 ரூபா. கோவில் தேவைக்கு எல்லோரும் வாங்கும் அபிடேக நெய் 50 ரூபா!" என்றான். "கடவுளே! உன்னை இப்படியுமா மனிதன் மலினப் படுத்துகிறான்?" என்று பெரு மூச்சு விட்டார் சாமியார்.

## 90 "அல்வா பசிக்கி'து"

கோவில் வீதி மிட்டாய்க் கடையில் அல்வாவைக் கண்ட குழந்தை "அப்பா! அல்வா பசிக்கி'தப்பா!" என்று தயங்கியது. "பசிக்கி'து" என்றால்தான் குடிகார அப்பன் இரங்குவான், தான் ஆசைப்படும் அல்வாவை வாங்கித் தருவான் என்று குழந்தை நினைக்கும் தன் இழிநிலையை உணர்ந்த அப்பனுக்கு நெஞ்சு தாங்கவில்லை. உடனே, மறுநாள் குடிக்க என்று வைத்திருந்த காசை எடுத்துக் குழந்தைக்குத் தாராளமாக அல்வா வாங்கிக்கொடுத்தான். அன்றோடு குடியையும் கைவிட்டான்.

## 91 மனித வல்லமைகள்

அந்தப் பெற்றோர்கள் இரண்டு பிள்ளைகள் போதும் என்று கருத்தடைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். 15 ஆண்டுகள் கழித்துப் போரினால் இரண்டு பிள்ளைகளும் மடிந்தனர். ஏக்கத்தோடு என்ன முயன்றும் அவர்களால் இன்னொரு பிள்ளையையேனும் பெற்றுவிட முடியவில்லை. "கடவுள் தீர்மானிக்க வேண்டிய தொகையை நாங்கள் அகந்தையால் தீர்மானித்து நாசமானோமே!" என்று இப்பொழுது அவர்கள் அழுகிறார்கள்.

## 92 போதையிலும் புத்திக்கூர்மை

முழு மதுமயக்கத்திலிருந்த வீட்டுக்காரன் ஒரு கிண்ணத்தில் சாராயத்தை வார்த்து வேலைக்காரச் சிறுவனிடம் நீட்டிக் "குடி" என்று மிரட்டினான். அவன் "இதைக் குடித்துத்தான் என் அம்மாவை என் அப்பா அடித்துக் கொன்றார் ஐயா. வேண்டாம் ஐயா. விட்டிடுங்கள் சாமி!" என்று அழுது கெஞ்சினான். "இனிமேல் மது வாங்க மதுக்கடைக்கு அவனையே நம்பி அனுப்பலாம்!" என்று எசமானன் உள்ளூர மகிழ்ந்தான்.

## 93 தேவலோகம் நாறிடுமே!

"அந்தப் பெரிய இராமனின் கதையை இந்த அற்பன் பாடி முடிக்க முடியுமா? பெரிய திருப்பாற்கடலைச் சிறிய பூனை குடித்து முடிக்க முடியுமா? என்று கம்பன்...." எனத் தொடர்ந்த இலக்கியபாட ஆசிரியரை இடைமறித்து ஒரு மாணவன், "சேர்! பூனை பாற்கடலைக் குடித்துக்கொண்டிருக்க, அது பின்புற வழியால் வெளியேறிக் கொண்டிருந்தால் ஒருநாள் குடித்து முடியும்தானே?" என்றான். இன்னொரு மாணவன் "அப்படி உருவாகும் புதிய கடலால் தேவலோகம் நாற நேரும்! இல்லையா சேர்?" என்றான்.

## 94 பணிப்பாளர் பாதையிலே.......!

அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் தமது அலுவலகச் சிற்றூழியனை அழைத்துப் பணங்கொடுத்துச் சந்தையில் மீன் வாங்கிக் கொண்டுபோய்த் தமது வீட்டில் கொடுத்து வரும்படி கூறினார். அவன் பணிவோடு ஏற்று, உற்சாகமாக விரைந்து சென்றதை அவதானித்த அவர், அவனும் தன்வழியில் ஒருகாலம் ஒரு பணிப்பாளனாக உயர்வான் என்று உறுதியாக நம்பினார்.

## 95 பைத்தியம் படுகொலை

ஊரவர் பலர் தன் தன் அசிங்கமான பிரச்சினைகளை அந்தச் சந்நியாசியிடமே நம்பிக் கூறித் தீர்வுகள் பெற்றிருந் தனர். இவ்வாறு பயங்கர இரகசியங்களின் களஞ்சியமாகியி ருந்த சந்நியாசியாருக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டுள்ள தாகக் கதை பரவியது. எங்கே தங்கள் இரகசியங்களை அவர் வெளியில் உளறி விடுவாரோ என்று பலர் அஞ்சினர். மறுநாள் காலை ஆச்சிரமத்தில் சந்நியாசியார் சடலமாகிக் கிடந்தார்.

## 96 சென்றது தனித்தனி! வந்தது...?

தாளோடு தாளாக அவ்வப்போது கடைக்குள் நுழையுங் கிழிந்த பணநோட்டுகளை உடனுக்குடன் அர்ச் சனை, அபிடேகத்துக் கென்று கோவிலின் தலையிற் கட்டியடித்துப் புண்ணியம் தேடி வந்த கடை முதலாளி, அவைகள் ஒரு நாள் மொத்தமாகக் குருக்களால் அபிடேகப் பொருட்கள் கொள்வனவுக்காகச் செலுத்தப்பட்ட போது அதிர்ந்து திணறினார்.

## 97 அந்தோ எங்கள் மணிகளே!

ஓர் இலக்கியப் 'புலவர் வரிசை' நூலில் காணப்பட்ட கவிப்பூஷணம், சந்தக்கவிமணி, கவிமாமணி, அருட்கவிமணி செங்குன்றன் என்ற புலவர் பற்றி அறிவதற்காக அவரது வீடு தேடிச் சென்ற ஆய்வாளரிடம் "அவர் எழுதியதே இது மட்டும்தான்!" என்று ஒரு பத்துப் பக்க நூலை அவர் வாரிசுகள் தந்தார்கள். இசை முறிவுகள் கொண்ட 20 பாடல்கள் மட்டும் அதில் இருந்தன. புலவரின் பட்டங்கள் யாவும் அந்தக் குறிச்சி நூல்நிலையத்தால் ஆண்டு விழாக் களில் வழங்கப் பட்டவையே எனத் தெரிவிக்கப்பட்டது. "அந்தோ எங்கள் மணிகளே!" என்று தலையில் கை வைத்தார் ஆய்வாளர்.

## 98 அப்பா பேரில் அம்மாவுக்காக

தந்தையாரின் மரணவீட்டில் 40 வயது மகன் விக்கி, விக்கி அழுதான். "இப்படி ஒரு தந்தைப் பாசமாடா?" என்று நண்பன் வியந்தபோது, "மண்ணாங்கட்டி! உது செத்ததாலே, ஊர்க் கல்யாண வீடுகளில் முகாமை செலுத்தும் கௌர வத்தை, பெருமிதத்தை, மகிழ்ச்சியை எல்லாம் என் அம்மா நிரந்தரமாக இழந்துவிட்டாளே என்றுதான்டா நான் அழுகி றேன்!" என்றான் அந்த மகன்.

## 99 தாலாட்டுப் பயங்கரம்

ஆறுமாதக் குழந்தை ஒன்று இரவுகளில் அடிக்கடி விழித்துக் கதறிவந்தது. கோவிற் குருக்கள் பார்வை பார்த்தும், மருத்துவர் மருந்து தந்தும் அது நிற்கவில்லை. தாங்க ஒண்ணாக் கவலை காரணமாகக் குழந்தையைத் தொட்டிலிற் போட்டு ஆட்டும்போது தாய் தாலாட்டுப் பாடுவது நின்றது. அதிலிருந்து குழந்தை திடுக்கிட்டு விழித்து அழுவதும் நின்றது.


## 100 புகழாசை புரிந்த கொலை


ஊரறிய ஊழல் வழிகளில் பணங் குவித்துப் பொருளாசை தீர்த்த சிலரை முதுமையில் புகழாசை பிடித்து ஆட்டிற்று. அவர்கள் கூடித் திட்டம் போட்டு ஓர் ஆசிரியருக்குப் பவளவிழா நடத்தினர். அந்த மேடையில் அவர்கள் ஒருவரை ஒருவர் மாறி, மாறிப் புகழ்ந்து பேசித் தங்கள் புகழாசையைத் தீர்த்துக் கொண்டனர். ஆனால் கடமைக்காக, தங்களை உருவாக்கிய சிற்பி அந்த ஆசிரியரே என்று மட்டும் அவர்கள் புகழக் புகழக் கேட்ட அவமானத்தால் ஆசிரியர் மாரடைப்பு வந்து மேடையிலேயே வீழ்ந்து இறக்கவும் செய்துவிட்டனர்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

இலக்கியம் படைக்க நினைக்கும்
இளம் படைப்பாளிகளை
இனம் கண்டு களம் இறக்கி
இருகரத்தில் தாங்க ~ பிரசுர
இலாகா அழுத்தக ஸ்தாபகரது
இனிய நல் சேவைக்கு
இன்றே தொடர்பு கொள்வீர்!
இனிதே பயன் பெறுவீர்!

சில்வர் பிறின்ற் ஹவுஸ் பதிப்பகம்
மிசிசாக - கனடா


தாயகம் முதல் புலம்பெயர்
தேசம் வரை 25 வருட அனுபவம்
பெற்றவர்களின், சிறந்த பதிப்பகச்
சேவைகளுக்கு........
தொடர்புகளுக்கு,
905 290 9116 / 647 338 9116
சில்வர்
பிறின்ற் ஹவுஸ் பதிப்பகம்



## நூலாசிரியரைப் பற்றி....

திரு. ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் பன்முக ஆளுமை கொண்ட பண்டிதப்பட்டதாரியாவார். இவர் ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் 37 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தில் பணிபுரிந்த அறிஞராவார். இன்று புலம் பெயர்ந்து, கனடிய மண்ணிலும் தனது இலக்கியப் பணியைத் தொடர்ந்தவண்ணம் இருக்கிறார்.

இவரது அயராத உழைப்பின் காரணமாக நவீன இலக்கிய வரிசையில் கவிதைகள், காவியங்கள், குறுங்காவியங்கள், குட்டிக்கதைகள், சிறுகதைகள், நாடகங்கள், பாநாடகங்கள், சிறுவர் இலக்கியம், நாவல், உருவகக் கதைகள், பரிசோதனை வகையான சின்னஞ்சிறு கதைகள் மட்டுமல்ல, பண்டைய இலக்கிய வரிசையில் திருவூஞ்சல்கள், திருவிரட்டை மணிமாலைகள், மும்மணிக் கோவைகள், நான்மணி மாலைகள், தூதுகள், பிள்ளைத்தமிழ்கள், தலபுராணங்கள், அந்தாதி, திருப்பள்ளி எழுச்சிகள் என்று இதுவரை சுமார் 90 வரையிலான நூல் ஆக்கங்கள் வெளிவந்து காலம் காட்டி நிற்பது மட்டுமல்லாமல், ஈழத்தமிழ் இலக்கியத்திற்கு உரம் சேர்த்தவண்ணமும் இருக்கின்றன.

இவரது இசைப்பாடல்கள் தமிழகப் பிரபல பாடகர்களான மாணிக்க விநாயகம், ஹரிஷ் ராகவேந்திரா, பிரசன்னா, மாலதி, மனோ போன்றவர்களால் பாடப்பட்டு இசைப்பேழைகளாக வெளிவந்து பலரின் பாராட்டையும் பெற்றிருக்கின்றன. இவரது "எழிலி" என்ற சமூகக் காவியம் 1965ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்றது. ச. வே. பஞ்சாட்சரம் கவிதைகள் என்ற கவிதைத் தொகுப்பு 2002ஆம் ஆண்டுக்கான இலங்கை கலை இலக்கியப் பேரவையின் பரிசைப் பெற்றது. இவரது பாநாடகங்கள், நாடகங்கள், கவிதைகள், இசைப்பாடல்கள் என்பன பல பரிசுகளை வென்றெடுத்துள்ளதையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழ் மீது கொண்ட காதல் காரணமாக இவர் புலம் பெயர்ந்த மண்ணிலும் தமிழ், தமிழன் என்ற உணர்வோடு தனது மண்ணுக்கான பங்களிப்பை இன்றும் தொடர்ந்து செய்வதற்கு அயராது பாடுபட்டு வருகிறார். இவரது தமிழ் உணர்வோடு கூடிய பண்புநலம் மிகுந்த படைப்புக்கள் தமிழ் இலக்கிய உலகின் எதிர்காலத்தை இன்னும் செழுமைப்படுத்தும் என்பது உறுதி.

~ **குரு அரவிந்தன்.**

*அச்சுப் பதிப்பு : சில்வர் பிறின்ற் ஹவுஸ், மிசிசாகா, ஒன்ராரியோ மாகாணம், கனடா.*